★★★

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 5—11—1978 | இதழ் -8

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

(பாலம்மாள் வீடு— ஒரு விளக்கின் ஒளியில் பாலம்மா, புராணம் படித்துக் கொண்டிருக்கிருள். அவள் விழிகள் புத்தகத்திலும் வாயிற்புறம் நோக்கியும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. "என்னடா இது! மணி எட்டுக்கு மேலே ஆகுது! இந்த காந்தாவையும் லீலாவையும் வரக்காணோம்' என்று பாலம்மாவின் வாய் முணுமுணுக்கிறது. அப்போது தெருவில் 'டாக்சி' வந்து நிற்கும் சப்தம் கேட்கிறது. புராணப் புத்தகத்தை அப்படியே போட்டுவிட்டு பாலம்மா எழுந்து, வாயிற்புறம் நோக்கிப் போகிருள். நொண்டி உள்ளே நுழைகிருன்.)

பாலம்மா: வாங்கய்யா வாங்க! என்ன ரொம்ப நாளா காணம்!...

நொண்டி: என்னம்மா! நீ மாத்திரம்தான் இருக்கியா?

பாலம்மா: அது என்ன அப்படி கேட்டுட்டீங்க!... புத்தம் புதுசு இரண்டு புருக்கள் இருக்கு— இன்னம் கொஞ்ச நேரத்திலே பறந்து வரும் பாருங்க... உட்காருங்க!...

நொண்டி: இல்லே...இல்லே என் கூட ஒருத்தர் வந்திருக்கார்... அவரையும் கூப்பிடுகிறேன்.

பாலம்மா: கூப்பிடுங்க!

நொண்டி: அண்ணச்சி... அண்ணச்சி ... வாங்க அண்ணச்சி!

(அண்ணச்சி தள்ளாடிய நிலையில் உள்ளே வருகிருன். பாலம்மா, பரபரப்புடன் நாற்காலியை எடுத்துப் போட்டு அவனை உட்காரச் சொல்லுகிருள். அண்ணச்சி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே உட்காருகிருன்.)

நொண்டி: என்ன அண்ணே பாக்கிறீங்க?... இன்னம் ஆளுங்க வரலே. இப்ப வந்துடுவாங்க...

பாலம்மா: ஏதாவது சாப்பிடுறீங்களா? ஆர்லிக்ஸ் பால் – காபி – டீ'...

நொண்டி: என்னம்மா நீ மோசமான கேள்வியெல்லாம் கேக்கிறே? புனித ராஜ்யத்திலே ஆர்லிக்சும் காபியும் சாப்பிடுகிற நேரமா இது?... இப்ப நாங்க என்ன சாப்பிட்டுட்டு வந்திருக்கிறோம் தெரியுமில்லே?

பாலம்மா: தெரியுது! தெரியுது! அது வேணும்னாலும் வாங்கிட்டு வர்ரேன். நோட்டை நீட்டுங்க.

அண்ணச்சி: வேண்டாம்! வேண்டாம்; கையோடவே கொண்டாந்திருக்கோம்.

(ஒரு பாட்டிலையெடுத்துக் காட்டுகிருன். பாலம்மா புன்னகை புரிந்து கொண்டே, இரண்டு கிளாஸ்களைக் கொண்டு வந்து வைக்கிருள். அண்ணச்சியும் நொண்டியும் மீண்டும் குடிக்கிருர்கள்)

நொண்டி: பாலம்மா! எங்கே புருக்கள்னே புதுசுகள்னே — ஒண்ணையும் காணும்!

பாலம்மா: இப்ப வந்துடுவாளுங்க; கொஞ்சம் பொறுமையா இருங்க.

(அப்போது டெலிபோன் மணி அடிக்கிறது. பாலம்மாள்போய் எடுத்துப் பேசுகிருள்)

பாலம்மா: அலோ! அலோ! யாரது?... நான் தான் பாலம்மா பேசுறேன், என்னது ?... காந்தா லீலா ரெண்டுபேருமா?.. அடக் கடவுளே .. சரி!.. சரி!... நான் காலையிலே வந்து பாக்குறேன் — இப்ப ரெண்டுபேர் வந்து காத்துகிட்டு இருக்காங்களே; என்ன பண்றது? வேற ஏதாவது தோதுப்படுமா? எப்படியாவது பாரப்பா! வெகு தூரத்திலே இருந்து வந்திருக்காங்க! சரி வச்சுடுறேன். அவுளுங்களை நல்லா கவனிச்சு பார்க்கச் சொல்லு! நான் விசாரிச்சேன்னு சொல்லு சரி! சரி!... நான் சொன்னதை கவனிச்சு ஏதாச்சும் உடனே அனுப்பி வைக்க ஏற்பாடு பண்ணு! நல்ல கிராக்கி வந்திருக்கு.

(டெலிபோனை வைத்து விட்டு வருகிருள்)

பாலம்மா: பாருங்க! நம்ம ஒண்ணு நினைக்க தெய்வம் ஒண்ணு நினைக்கும் பாங்களே; அது சரியாப் போச்சு! ஏழுமணிக்கே வர்ரேன்னு சொல்லிட்டுப் போன குட்டிகள் ரெண்டும் டாக்சியிலே வரும் போது ஆக்சிடெண்ட் ஆயிட்டுதாம். ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்களாம். காயம் ஒண்ணும் பயப்படுற மாதிரி இல்லையாம். இருந்தாலும் இன்னைக்குவரத் தோதுப்படாதாம்.

அண்ணச்சி: அய்யய்யோ! ஏ, நொண்டி என்னடா ஆசைகாட்டி அழைச்சுகிட்டு வந்துட்டு மோசம் பண்ணிட்டே.

காட்சி 13

நொண்டி: பாலம்மா! நானூறல்ல ஐநூறல்ல எவ்வளவு வேணும்னாலும் தருவாரு எப்படியாவது ஏற்பாடு பண்ணியே ஆகணும்.

(நானூறு ஐநூறு என்ற சொல் காதில்

(10-ம் பக்கம் பார்க்க)

புனிதத்தலத்திற்குப் போய் வந்தோம்!

சா. கணேசன்

நாட்டில் அராஜகம் கொடி கட்டி பறந்துகொண்டிருக்கிறது. வன்முறை தலை தூக்கித் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் கொள்ளையும், கொலையும் கோரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பெண்களின் கற்பு பகிரங்கமாகச் சூறையாடப்படுகிறது. இன்று வேலியே பயிரை மேய்ந்துகொண்டிருக்கிறது.

எழுத்துரிமைக்கு எல்லை கட்டப் பத்திரிகை அலுவலகங்களில் சோதனை போடப்படுகிறது. காவல் துறையினர் கெடுபிடி செய்கின்றனர்' பேச்சுரிமைக்குச் சாவுமணி அடிக்கப்படுகிறது. பொதுக் கூட்ட மேடையில் பேசி விட்டுத் திரும்புகிறான் இளம் பிஞ்சு இளஞ் செழியன். அவன் வந்த காரை ஆளும் கட்சிக் குண்டர்கள் வழி மறிக்கிறார்கள். தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டு அந்த இளஞ் சிங்கத்தின் இரத்தம் குடிக்கிறார்கள். அந்தச் சரித்திரக் கன்று சாகடிக்கப்படுகிறது

தொழிற்சாலையின் கதவுகள் இழுத்து மூடப்படுகின்றன. தொழிலாளிகள் நடுத் தெருவிலே தள்ளப்படுகின்றனர். முதலமைச்சர் முழு மூச்சோடு மூடு விழாவிற்கு முன் நிற்கிறார்.

மாணவச் செல்வங்களின் வேலை நிறுத்தம். ஆசிரியப் பெருமக்களின் மானப் போராட்டம், இவற்றிற்கு அரசு தீர்வுகாண முயலவில்லை. மாறாக அவர்களைக் கடுஞ் சிறையிலே தள்ளுவதில் களிப்படைகிறது.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் வேதனைக் கண்ணீரைப் பாய்ச்சிக்கொண்டிருக்கிறார்கள் அது புறக்கணிக்கப்படுகிறது. அறப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். அடக்குமுறை அரசாங்கம் அன்றாடம் உழைக்கும் ஏழை விவசாயிகளை சிறையிலே அடைக்கிறது. காவல் துறையினரின் கண்மூடித்தனமான தடியடி தாக்குதல். தொடர்ந்து துப்பாக்கிச் சூடு ஏழை விவசாயிகள் எட்டுப் பேர் துடிதுடிக்கச் செத்தனர்; "எட்டுப் பேர்தானே மடிந்தனர்' என்றுகூறி, கோட்டையிலே கொலு இருப்பவர்கள் எள்ளல் சிரிப்புகளை அள்ளி வீசினர்.

எட்டு மாதத்திற்கு மேல் பட்டினி கிடக்கிறான் ஏழைத் தொழிலாளி' அவனைப்பார்த்து, "அடிமை முறிச் சீட்டில் கையெழுத்துப் போட்டு ஆலைக்கு வா" என்று ஆர்ப்பரிக்கிறது ஆணவம் பிடித்த நிர்வாகம்.

இப்படிப்பட்ட ஆதிக்க முதலாளிகளுக்கு ஆலவட்டம் பிடிக்கிறது அதிகார போதையில் தள்ளாடும் அரசு, இப்படித்தான் இந்தப் புனித ஆட்சியின் பொன்னேடுகள் புரண்டு கொண்டிருக்கின்றன. இந்த இழிநிலை போக்கப்பட வேண்டும். இன்னல்கள் நீக்கப்பட வேண்டும். போதை ஏறியிருக்கும் இந்தப் பொல்லாத அரசுக்குப் புத்தியும் புகட்ட வேண்டும். ஆளும் கட்சிக் குண்டர்களின் அராஜகப் போக்குக்கும், தடியாட்சி தர்பாரின் தாறுமாறுகளுக்கும், அதிகார வர்க்கத்தின் அதிபோதை மமதைக்கும் முடிவு கட்ட வேண்டும் என்று இறுதியாக எதிர்க் கட்சிகள் ஒருநாள் அடையாள அறப் போர் நடத்தின!

அதுதான் கடையடைப்பு! வேலை நிறுத்தம்! அமைதியான போர் அந்த நாளே அக்டோபர் 23!

இடது சாரி ஜனநாயகக் கட்சிகளான தி. மு. க கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, மற்றும் முஸ்லீம் லீக், பார்வார்டுபிளாக், காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் தொழிற் சங்கங்கள் அனைத்தும் இணைந்து அறிவித்தன.

இந்த எதிர்ப்பு அணியின் சங்க நாதம் ஆளும் வர்க்கத்தின் அடிவயிற்றையே கலக்கிவிட்டது. வேலை நிறுத்தத்தை ஒடுக்கிட; கடையடைப்பை தடுத்திட ஆட்சியிலே அமர்ந்திருக்கும் நடிகர் இராமச் சந்திரன் காவல் துறைக்குக் கடுமையான உத்தரவிடுகிறார் அதன் விளைவு, தமிழகத்தில் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட அனைத்துக் கட்சி தோழர்களும் வெஞ்சிறையிலே தள்ளப்பட்டார்கள்.

ஆளுங் கட்சிக் குண்டர்களின் ஆணைப்படியும் காவல் துறை அதிகாரிகள் செயல்பட வேண்டும் என்று முதல்வர் கூட்டிய கூட்டத்தில் சொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த மிரட்டல் நிகழ்ச்சிகளையும் மீறித்தான் நகரங்களில் கடைகளெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. தொழிலாளிகள் வேலைக்குச் செல்வதைத் தவிர்த்தனர் தொழிற்சாலைகள் அனைத்தும் அன்றைய தினம் மூடிக் கிடந்தன. பொது மக்கள் அனைவரும் தங்களுடைய ஆதரவினை அளித்தனர்; அலுவல்களுக்கு ஓய்வு கொடுத்து அவரவர் இல்லங்களிலேயே இருந்துவிட்டனர்.

ஆணவம் பிடித்த அரசோ கூலிப்பட்டாளத்தைக் கொண்டு சில இடங்களில் பேருந்துகளை ஓட்டிப்பார்த்தது மக்களோ பேருந்துகளில் பயணம் செய்யவில்லை. ஆட்சிக் கட்சியின் அடியாட்களே உள்ளே அமர்ந்திருந்தனர் நகரங்களின் தெருக்களெல்லாம் அன்றைய தினம் வெறிச்சோடிக் கிடந்தன. ஆக மொத்தம் அர்த்தால் வெற்றிகரமாகவே முடிந்தது.

கடைகளின் உரிமையாளர்கள் தங்களுடைய கடைகளைத் திறக்கச் சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டனர்; மிரட்டப்பட்டனர். சில இடங்களில் அவர்கள் தாக்கப்பட்டனர். பல இடங்களில் கடைகளெல்லாம் சூறையாடப்பட்டன. பல இடங்களில் ஆளுங்கட்சியின் குண்டர்கள் எதிர்க்கட்சிகளின் தொண்டர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கினர். பலருடைய மண்டைகள் உடைந்தன.

தஞ்சை மாவட்டம், மன்னார்குடியில் கழகத் தோழர்களை, கம்யூனிஸ்டுத் தொண்டர்களை, மார்க்சிஸ்ட் பாட்டாளிகளை எம். ஜி. ஆரின் கூலிப்பட்டாளம் ஏசிப்பேசி வம்புக்கு இழுத்தது.

வன்முறையில் ஈடுபட்டு குண்டர்கள் தாக்கவும் அதைத் தொடர்ந்து காவல் துறையினர் தடியடி நடத்தினர். கண்ணீர்ப்புகைக் குண்டு வீசினர். துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் இருபத்து இரண்டு தோழர்களை துப்பாக்கிக் குண்டுகளை துளைத்தன.

ஒரு தோழரின் கண்ணில் குண்டு பாய்ந்து விட்டது. மற்றொரு தோழரின் வயிற்றில் குண்டு பாய்ந்துவிட்டது. ஒருவருக்குத் தொடையிலும், ஒருவருக்கு கையிலும் இப்படி பல தோழர்கள் துப்பாக்கி குண்டு பாய்ந்து மருத்துவமனையில் கிடத்தப்பட்டனர். இருவர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்

சத்தியத்தாயின் புதல்வருக்கு மனம் கல்லாகிவிட்டதோ, இரும்பாகிவிட்டதோ தெரியவில்லை. மனம் கலங்கவில்லை. நடந்துவிட்ட கோரச் சம்பவத்திற்கு வருத்தமும் தெரிவிக்கவில்லை. மனமும் இரங்கவில்லை. வழக்கமாக அவர் விடும் கிளிசரின் கண்ணீரைக்கூட அன்றுவிடத் தயாராக இல்லை.

அனைத்துக்கும் மேலாக அநாகரிக சம்பவம் ஒன்று சென்னை மாநகரில் நடந்துவிட்டது. தமிழகத்து நாகரிக அரசியலில் ஒரு நச்சுப்பாம்பு நுழைந்துவிட்டது.

எம். ஜி. ஆர். கட்சியின் ரவுடிகள் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் குடியிருக்கும் கோபாலபுரம் நோக்கிபட்டப் பகலில் படையெடுத்தனர். காவல்துறையினர் கம்பியில்லாத் தந்தி உள்ள வாகனங்களில் நகரின் வீதிகளில் சுற்றியபடியேதான் இருந்தனர். ஆனாலும் ஆளும் கட்சியின் காலிகள் கலைஞர் இல்லத்தின் மீது சரமாரியாகக் கற்களை வீசித் தாக்கினர்; கதவுகளை உடைத்தனர். சுவரில் மாட்டியிருந்த தலைவர்களின் திருவுருவப் படங்களை நொறுக்கினர், அங்கிருந்த முரசொலி மாறன் அவர்களின் மகனை கல்லால் அடித்து காயப்படுத்திவிட்டனர். காலித்தனம் கட்டுக்கடங்காமல் இருந்ததற்கு காவல்துறையே காரணமாக இருந்துவிட்டது

தமிழகத்தின் முன்னாள் முதல்வரின் — இன்றைய முதன்மை எதிர்க்கட்சித் தலைவரின் இல்லம் தாக்கப்பட்டது. அநாகரிக அரசியலுக்குத் தமிழகமும் இடம் கொடுத்துவிட்டதே என்று இந்தியாவே வேதனைப்படுகிறது

முகம்மது நபியைக் கல்லால் அடித்த காலிகள் கூட்டத்தின் காலம் இன்னும் முடிந்து விடவில்லைபோலும்!

அண்ணாவின் அறிவுரையை நெஞ்சில் தேக்கிக்கொண்டவர்களே கழகத்தின் தொண்டர்கள். கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணாவையே காற்றில் பறக்கவிடும் கோமாளிக்கூட்டம் கொள்கையையா பறக்கவிடாது? அண்ணாவின் லட்சியமான மாநில சுயாட்சியையே மறுத்துப்பேசும் பேர்வழிகளாயிற்றே! அண்ணா சொன்னார். "கத்தியைத் தீட்டாதே! தம்பி புத்தியைத் தீட்டு" என்று. முன்னதைக் கொஞ்சம்மாற்றி கத்தியைத் தீட்டுவதில் கவனம் செலுத்துகிறார்கள்.

இந்நாட்டின் இனத்தலைவர் டாக்டர் கலைஞர் ஆணையிட்டார், வேலை நிறுத்தம் வெற்றிபெற வேண்டுமென்று. ஆயிரமாயிரம் கழகத் தோழர்கள் களம் புகுந்தனர்; தங்கள் கடமையைச் செய்தனர்; கடுஞ் சிறை ஏகினர்.

முதல் விடுதலைப் போரில் வெள்ளையன் ஆதிக்கத்தை எதிர்த்து வெஞ்சமர் புரிந்த கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. பாளைச் சிறையிலே வைக்கப்பட்டார். அச்சிறை வரலாற்றுப் புகழை எட்டிவிட்டது. அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற பாளைச்சிறையிலேதான் இரண்டாம் விடுதலைப் போர்த்தளபதி கலைஞர் 1965ல் நடந்த மொழிப் புரட்சியின்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

வாழ்க முத்தமிழ்க் காவலர்!

எண்பதாவது பிறந்த நாள் வைர விழாக் காணும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு 'நம்நாடு' சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திரா கட்சியினரின் வன்முறை

நெருக்கடி நிலையின்போது சிறையில் அடைக்கப்பட்ட நடிகை சிநேகலதா ரெட்டி, போலீசாரின் சித்திரவதைகளால் உயிரிழந்தவர்.

அவருடைய மகளான நடிகை குமாரி நந்தனா சிக்மகளூர் தொகுதியில் இந்திராவை எதிர்த்துக் கடுமையாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்.

கோபா என்ற இடத்தில் நந்தனா இந்திரா காந்திக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது இந்திரா கட்சியைச் சேர்ந்த சிலர் அவரைக் கத்தியால் குத்தியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

...அரியானாவில் ஒரு மனுநீதிச் சோழர்!



பாம்புப் புற்றுக்கு மேலே
ஒரு பன்னீர்ப் பூ?
சாம்பல் முட்டுக்கு மேலே
ஒரு தங்கச் சரடு?
அரசியல் சகதிக்கு நடுவே
அரியானா முதலமைச்சர்—
தேவிலால்!

'தப்புத் தாளங்கள்'போட்டுத் தாண்டவம் ஆடிய தமது தறுதலைப் பிள்ளையைத் தள்ளி வைக்கவே துணிந்து விட்டார் அந்தத் தலைவர்?

'சொந்த மகனாயிற்றே?' என்று பந்த பாசங்களுக்கெல்லாம் பலியாகவில்லை அந்தப் பணித் திலகம்!

தொண்டுக்குத் தர வேண்டிய தூய்மையான பெரு மதிப்பைத் தூக்கிலே தொங்கவிடாமல்—பேராசைப் பித்தேறிய மகனைத் தூக்கி எறிந்து விட்டார் அந்த ஆட்சியின் காவலர்.

இந்தியாவே ஏற்றிப்போற்றிட இணையற்ற நடு நிலைத் தலைவராக நிகரற்ற நீதித் தாயின் 'சேயாக புகழின் குன்றின் மீது ஏறி நிற்கின்றார். அந்த அரியானாவின் அரிமா!

மாண்புமிகு தேவிலால் அவர்கட்கு இந்தத் திடீர்ப் புகழ் எப்படி ஏற்பட்டது?

அவரது பெருமைக்குப் பெரும் பள்ளம் வெட்ட வந்த சிறுமை மிகு சேயினாலேயே!

தற்போது அறுபத்தைந்து வயதை அணுகிக்கொண்டிருக்கும் தேவிலாலுக்கு நான்கு மகன்கள்'

அவர்களில் ஒருவர் பெயர் ஓம் பிரகாஷ், அரியானா மாநில சனதாக் கட்சியின பொதுச் செயலாளர். ஆகவே அவர் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறார்!

பொதுத் தொண்டு புரிய முற்பட்டு, ஆற்றலையெல்லாம் காட்டி, சனதாக் கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனைபேரும் தம்மை ஆதரிக்குமாறு நடந்து புகழ்க் கனிகளை அள்ளிக்குவித்திடத் துள்ளும் இளமையுடன் துடிப்புடன் செயலாற்றியவரே ஓம் பிரகாஷ்!

அவரைத்தான் தள்ளி வைத்திருக்கிறார் தேவிலால்!

'என் மகன் ஓம்பிரகாஷை நான் துறந்து விட்டேன். அவனது நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாளி அல்லன். அவனுக்கு எதிராகக் குறிப்பிடத் தக்க குற்றச் சாட்டுகள் சுட்டிக் காட்டப்படுமானால் அவற்றைப்பற்றி விசாரணை நடத்த ஆணையிடவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன்!''

—என்று அழுத்தம் திருத்தமாகவே கூறியிருக்கிறார் அரியானாவின் முதல்வர்.

இந்த அளவுக்குத் தமது இரத்த பாசத்தையே அறுத்தெறிந்து விட்டுச் சீற்றத்தைத் தூக்குவானேன் தேவிலால்?

நீதிக்கு நெருப்பு வைத்தார்

ஓம் பிரகாஷ் ஆடியுள்ள அரசியல் நடனங்கள்—அடாவடித் தனங்கள்—அறக்கொலைகள்—அத்தகையவை!

திறமைக்குப் பெயர்பெற்ற ஓம் பிரகாஷ் நெறி முறைகளுக்கு—நீதி உணர்வுக்கு—நெருப்பு வைத்தார்.

சட்ட விதிகளுக்குச் சவக்குழி தோண்ட முற்பட்டார்.

மாநில சனதாக் கட்சியின் மதிப்பு மிகு பொதுச் செயலாளர் பதவி தந்த மதர்ப்பினாலும்—மாநில முதல்வரின் மகன் என்கிற உறவு தந்த மரியாதையினாலும்—தம இச்சைப்படியெல்லாம் எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று நடக்க முனைந்தார்.

முதலமைச்சராக உள்ள தம் தந்தைக்குத் தெரியாமலே வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்,

சப்பான் தாய்லாந்து, ஆங்காங் முதலான கீழை நாடுகளுக்கு இன்ப உலா—உல்லாசப் பயணம்—சென்றிருக்கிறார்.

வெளிநாடுகளுக்குத்தான் போனாரே அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டுகளித்த அளவோடு ஓம் பிரகாஷ் நின்றிருக்கக் கூடாதா?

அங்கேதான் அவரது பண வெறிப் பாம்பு தன் வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்துக் கிடக்க மறுத்து விட்டது,படம் எடுத்து ஆடத் தொடங்கி விட்டது'

அதன் விளைவு?

டில்லி மாநகர்—பாலம் விமான நிலையத்தில் வானூர்தியிலிருந்து ஓம் பிரகாஷ் வந்திறங்கிய பொழுது அவர் மட்டும் தனியாக வரவில்லையாம்.

பெட்டி பெட்டியாகக் கடத்தல் பொருள்களும் அவரோடு ஒட்டி உறவாடி வந்திருக்கின்றன.

ஐயப்பாடு எழுந்து ஆட்டிப் படைக்கவே கடமை உணர்வினைக் காவு கொடுக்க எண்ணாமல் சுங்க அதிகாரிகள் சோதனை செய்திருக்கின்றனர்.

ஓப் பிரகாஷ் கடத்தி வந்த கள்ளப் பொருள்கள் அவர்களது உள்ளத்தை உலுக்கியிருக்கின்றன?

அந்தப் பொருள்களின் மொத்த மதிப்பீடு பதினாறு ஆயிரம் ரூபாய் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மனமலையான்

அவற்றில் பெரும்பாலானவை கடியாரங்கள்; அவை விலைமதிப்பும் நெடிய உழைப்பும் கொண்ட 'சீக்கோ' வகையைச் சார்ந்தவை.

அவற்றை ஒளித்து விடுவதற்கு ஓப்பிரகாஷ் திட்டமிட்டு அவை பற்றிய தகவலைத் தருவதற்கு அவர் மறுக்க முற்பட்டதால், அந்தக் கடத்தல் பொருள்களை அதிகாரிகள் அரசுக்கு உடைமை ஆக்கி விட்டனர்.

துணிச்சல் மிக்க சுங்க அதிகாரிகள்

இந்தச்சோதனையின்போது சுங்க அதிகாரிகள் காட்டிய துணிச்சலை—நேர்மையை நீதி நெறியை—நாம் நெஞ்சாரப் போற்றத்தான் வேண்டும்.

ஒரு முதலமைச்சரின் மகனைச் சோதனை போடலாமா என்றுஅவர்கள் தயங்கவில்லை. அப்படிச் சோதனையிடுவதால் அந்த முதல்வரின் ஆத்திரத்துக்கு ஆளாகித் தமக்கு என்னென்ன ஆபத்துகள் விளையுமோ என்றும் அவர்கள் அஞ்சவில்லை.

தங்களது அதிகாரப் பதவி மீது அழுக்குப் படிந்திடாத வகையிலேயே சதிகாரச் செயலுக்குச் சாவுமணி அடித்திருக்கிறார்கள்'

கள்ளக் கடத்தல்காரர்களுக்குத் தாங்களும் உள்ளுக்குள் உடந்தை என்கிற பழி வராத வகையிலேயே அந்தச் சுங்க அதிகாரிகள்ஓம்பிரகாஷிடம் உறுதியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இச்சை வெறியர்களின் மிரட்டலைக்கண்டதும்நேர்மையாளர்களைக்கூடஅச்சஉணர்ச்சி அடியணியத் தூண்டுவது இயற்கை

அந்தஅச்சத்தையும்வென்றவர்களாகவே தங்கள் கடமையை ஆற்றியிருக்கிறார்கள் சுங்க அதிகாரிகள். அவர்களைப் போற்றுவது நமது கடமையாகும்; அவர்களைப் பின்பற்றிப் பிற அதிகாரிகளும் நீதியைப் பேணுவதற்கு இந் நிகழ்ச்சி ஒரு சீரிய எடுத்துக் காட்டாகும்.

ஆட்சித் துறையில் குடும்பத்தின் குறுக்கீடா?

தம்முடைய மகன் கள்ளக் கடத்தல் குற்றம் புரிந்துவிட்டான் என்று அறிந்ததுமே உள்ளம் கொதிப்படைந்துவிட்டார் தேவிலால்:

தமது குடும்பப் பெருமையின் மீதே நெருப்பை அள்ளிக் கொட்டிவிட்டானே மகன் என்று குமுறியிருக்கிறார்அவர்.

தமது நேர்மையான நிருவாகப் பெருமைக்கே ஊறு தேடி விட்டானே மகன்என்று உளமாறத் துடித்திருக்கிறார் அவர்.

அதனால் தான்—

''...என் மகனை நான் துறந்துவிட்டேன்??' —என்று வெளிப்படையாகவே அறிவித்துவிட்டார்.

தேவிலால் இவ்வாறு அறிவித்ததும் செய்தியாளர்கள் அவரை மொய்த்துக்கொண்டு துளைத்தெடுத்தகேள்விகளுக்கு அவர் அளித்துள்ள விடைகள்—நம்மை வியப்புக் கடலிலே ஆழ்த்துகின்றன.

அவர் தந்துள்ள தகவல்களின் சுருக்கம் வருமாறு:

தேவிலாலின் நான்கு மகன்களில் ஒருவரான ஓம்பிரகாஷ் அரசியல் கொள்கைகளில் தம் தந்தையோடு ஒத்துப்போகாதவர். அடிக்கடி மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வந்திருக்கிறார். குறிப்பாக, தேவிலால் அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்கு முன்பொருமுறை முயன்ற எதிர்ப்பாளர்களில் ஒருவரான பஜன்லால் என்பவரைத் தேவிலால் தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டது ஓம்பிரகாஷுக்கு அறவே பிடிக்கவில்லை. அதனாலேயே தந்தைக்கும்தனயனுக்கும் மனத்தாங்கள் உருவாகி பாசத்தையும்பிளந்திருக்கிறது

அதன்காரணமாகக் கடந்த இரண்டுமாதங்களுக்குமுன்பே தம் மகனுடன் கொண்டிருந்த ஒட்டுறவுகளையெல்லாம் வெட்டிக்கொண்டு விட்டார் தேவிலால்.

ஆனால் உண்மையில் ஆறு மாதங்களுக்கு மேலாகவே தம் தந்தையைப் பிரிந்து தனி வாழ்க்கை வாழ்ந்து வருகிறாராம் ஓப்பிரகாஷ்.

இந்த மகன் மட்டும்தான் தேவிலாலுக்கு எரிச்சலூட்டினார் என்று இல்லை. இன்னொரு மகனான பிரதாப் சிங் என்பவரும் தந்தையுடன் சண்டையிட்டுக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே குடும்பத்தை விட்டு விலகிப்போய் விட்டார்.

'அரசியல் காரணங்களுக்காகப் பிள்ளைகளை விட்டுப் பிரியலாமா?' என்னும்கேள்வி எழுவது இயற்கை.

இதற்கு தேவிலால் என்ன விடையளிக்கிறார் தெரியுமா?

''எனது அரசு நிருவாகத்தில் என்னுடைய குடும்பத்தாரோ உறவினர்களோ குறுக்கிடுவதை என்னால் பொறுத்துக்கொள்ளவே முடியாது! அனுமதிக்கவே முடியாது!''

தேவிலாலின் இந்த நேர்மைத் திண்மை—நிருவாகப் பொறுப்புணர்ச்சி எல்லா ஆட்சிப் பொறுப்பாளர்களுக்கும் அமையுமானால்—அரசியல் அரங்கத்திலே நீதித் தாய்க்கு

(தொடர்ச்சி -ம் பக்கம்)

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண்—பெண் கேன்வாசர்கள் தேவை.

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்
எஸ். காளிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்,

போன்; 316, 316 ஏ, 420 தந்தி: சித்தர்

ஆயிரம் பிறைகண்ட முத்தமிழ்க் காவலர் வாழ்க!

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் எண்பதாம் ஆண்டுபிறந்த நாள் விழா 10–11–78 முதல் 30–11–78 முடிய 21 நாட்கள், திருச்சியிலே கொண்டாடப் படுகிறது.

தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உழைப்பதற்கே தமது வாழ்நாளை ஒப்படைத்துக்கொண்டு, அறுபதாண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வருபவர் முத்தமிழ்க் காவலர்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் திரு, கி. ஆ. பெ. விசுவநாதம் பங்குகொள்ளாத ஒரு தமிழ் இலக்கிய, பண்பாட்டு விழாவே நடைபெறுவதில்லை எனலாம். அவரை அழைத்து நடத்தினால் தான் அந்த விழா நிறைவான விழாவாக அமையும் என்ற நம்பிக்கை மக்களிடையே ஆழமாகப் பதிந்துள்ளது.

வயதாலும், அறிவாலும், உழைப்பாலும் உணர்வாலும், தமிழர்களிடையே இன்று முதுபெரும் தலைவராகத் திகழ்ந்து வருபவர் முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களே யாவார்கள்.

தொடக்கத்தில் தந்தை பெரியார் அவர்களின் தன்மான இயக்கத்தால் கவரப்பட்ட திரு, கி. ஆ. பெ. அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும் இருந்து அரும்பணியாற்றியவராவார்.

நீதிக்கட்சியின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

1938 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் முத்தமிழ்க் காவலரின் பங்கு கணிசமானதாகும் அப்போது, பெரியாரும் அண்ணாவும் மற்ற பெருந்தலைவர்களும் சிறைப்பட்டுவிட்டவுடன் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் சென்னைக் கடற்கரையில் இலட்சோப லட்சம் தமிழ் மக்களைக் கூட்டி வீர முழக்கம் செய்தவர் கி. ஆ. பெ. தசுவநாதம் அவர்கள்.

தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும் எந்த உருவத்தில் தீங்கு வந்தாலும் உடனே துடித்தெழுந்து குரலெழுப்புபவர் கி. ஆ. பெ.

பிற்காலத்தில் அரசியலிலிருந்து தம்மை முற்றிலும் விலக்கிக்கொண்ட போதிலும் அவர் அரசியலில் அவ்வப்போது தலைகாட்டும் அநீதிகளைக் கண்டிக்கத் தவறுவதில்லை.

பெரியாரிடத்தும் அண்ணாவிடத்தும் அவர்

வைத்திருந்த மதிப்பும் அன்பும் அளவிடற்கரிது அதே போல் இன்று கலைஞரிடத்தும் அவர் அன்பும் மதிப்பும் கொண்டுள்ளார்.

இரண்டாவது உலகத்தமிழ்மாநாடு நடைபெற்றபோது, அண்ணா அவர்கள் கி. ஆ. பெ. அவர்களை அழைத்து மாநாட்டுப் பணிகளை அவரிடம் ஒப்படைத்ததையும், மாநாடு சிறப்புற நடைபெற அவர் ஆற்றிய பணிகளையும் மறந்துவிடுவதற்கில்லை.

பள்ளியிலோ, கல்லூரியிலோ படிக்காமல் தமது சொந்த முயற்சியினாலேயே தமிழை முறையாகப் பயின்று, தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் புலவராகவும் விளங்குபவர் கி. ஆ. பெ. அவர்கள்.

தமிழகப் புலவர் குழுவை நிறுவி, அதன் அமைப்பாளராகவும் இருந்து தொடர்ந்து பணியாற்றிவரும் கி. ஆ. பெ. அவர்கள், சிறந்த தமிழ்ப் புரவலரும் ஆவார்.

தமிழகத்தில் மட்டுமன்றி மலேயா சிங்கப்பூர், இலங்கை முதலிய வெளிநாடுகளுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்திருக்கும் முத்தமிழ்க் காவலர் அவர்கள், வானொலி வாயிலாகவும், பல நூல்கள் வாயிலாகவும் தமிழர்களுக்குத் தேவையான சிறந்த கருத்துக்களை அவ்வப்போது வழங்கி வருகிறார்.

இவர் எழுதிய 'தமிழ்ச்செல்வம்' என்னும் நாடகம் டி. கே. எஸ் சகோதரர்களால் நடிக்கப்பெற்று, தமிழ்மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கிறது.

தமிழ்ச் சித்த மருத்துவத்தில்தேர்ந்த அறிஞரான கி. ஆ. பெ. அவர்கள், சித்த மருத்துவத் தொடர்பான நூல்களும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் தமிழ்ப் பணியாற்றிவரும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஆயிரம் பிறைகண்டவராக, எண்பதாம் அகவையில் அடியெடுத்து வைத்திருப்பது, தமிழ் மக்களால் மகிழ்ந்து வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழினத்துக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் எனும் நமது விழைவினை வெளிப்படுத்தி அவருக்குப் பல்லாண்டு கூறுகிறோம்.

வாழ்க முத்தமிழ்க் காவலர்!
வளர்க அவர்தம் நற்றொண்டு!

நடிக முதல்வரின் வாய்க் கொழுப்பு!

"புதிய சட்டத்தை அமுல் நடத்த எங்களை (சர்வ கட்சியினர்) கலந்து ஆலோசிக்க வேண்டும். அதை எங்களிடம் விட்டுவிடுங்கள்" என்கிறார்கள்.

திருடன் கையில் தோத்துச் சாவியைக் கொடுப்பதா?'

—இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் 'திருடர்கள்' என்று சொல்லாமல் சொல்லுகிறார் எம். ஜி. ராமச்சந்திரன்.

எதிர்க்கட்சித் தலைவர்களை 'விசிலடிச்சான் குஞ்சுகளின்' தலைவர் எவ்வளவு தூரம் மதிக்கிறார் என்பதற்கு இப்பேச்சு ஓர் எடுத்துக் காட்டு!

கன்னக்கோல் மைனர்களையும் சாராயசாம்ராஜ்யம் நடத்தும் 'மாவீரர்களையும்' தன்பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கும் 'வரி ஏய்ப்புப் பேர்வழி'யின் வாயிலிருந்து கண்ணியமான வார்த்தைகளை எப்படி எதிர்பார்க்கமுடியும்?

தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கும் முதலமைச்சரின் இத்தகைய தரமான பேச்சுக்களையே தொடர்ந்து எதிர்பார்ப்போமாக!

வாய்க் கொழுப்பெடுத்து வரைமுறையற்றுப் பேசும் எம். ஜி. இராமச்சந்திரன், அவர்களே —

காற்றடித்தால் குப்பைகள்கூட கலசத்தில் அமர்ந்து விடுகின்றன; மீண்டும் ஒரு காற்றடித்தால் அதே குப்பைகள் மறுபடியும் புழுதிக்கே வந்துவிடும்!

Tel : JEKAyKAy : Phone : 679 (Bhavani)

J.K.K. TEXTILE PROCESSING MILLS

POST BOX No. 55

KOMARAPALAYAM- 638 183

(via) ERODE.

J.K.K J.K.K

With pleasure we have started our new Textile processing Mills. near New Cauvery Bridge, Komarapalym. We are doing cloth bleaching. dyeing and fiishing works with most modern sophisticated machineries and well trained personnel. to the entire satisfaction of the customers. We proudly announce that we are reputed processors in international market and 19% our capacity is engaged in Export variety.

இந்தியப் பொருளாதாரம்

ஏற்றம் பெறுமா?

(3)

1965—இல் உணவுப் பண்டங்கள் என்ன விலையில் விற்கப்பட்டனவோ அதே விலையில் தான் 1974—லும் அவை கிடைத்திருக்கின்றன. அந்த அளவுக்குப் பண வீக்கம் அங்கே கட்டுப்படுத்தப்பட்டு ஒழிக்கப்பட்டிருக்கிறது.

"ஒரு பொதுவுடைமை நாட்டில்செயற்படுத்தக்கூடிய புரட்சிப் பொருளாதாரத் திட்டத்தை ஒரு ஜனநாயக நாட்டில் அவ்வளவுவிரைவாக நிறைவேற்ற முடியுமா?"

— என்று சிலர்கேட்கலாம்.

ஒரு நாட்டின் ஆட்சி முறை பொதுவுடைமைக் கோட்பாட்டில் அமைந்தால்தான் மக்களின் வறிய வாழ்வுக்கு முடிவு காண முடியும் என்றால் — அப்போது ஜனநாயக முறை தோற்றுவிட்டது என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும்.

அவ்வாறு ஜனநாயக ஆட்சி முறை தோற்றுப் போக விடமாட்டோம் என்றுமார் தட்டினால் — பிறகு இந்த நாட்டுப் பாட்டாளி மக்களுக்குச் சனநாயகத்தில் நம்பிக்கை நசித்துப் போகாத அளவுக்குப் புரட்சிமிக்க புதிய பொருளாதாரக் கொள்கையை வகுத்தளிக்க வேண்டாமா?

அத்தகைய கண்ணோட்டம் ஓரளவேனும்ஏற்படவேண்டும் என்பதற்காகத்தான் அண்டை நாடான சீனத்தின் பொருளாதார நிலையைச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மார்க்சு — ஏங்கல்சின் கொள்கை வெளிச்சத்தினால் வறுமை இருட்டை ஒழிக்கும் சீனப் பொருளாதார அமைப்பு முறையை நாம் தேர்ந்தெடுக்க முடியாது என்றால் —

சனநாயக முறைப்படி தழைத்துச் செழித்துள்ள இசுரேல்நாட்டுப்பொருளாதாரக் கொள்கையையாவது ஏற்றுக் கொள்ள முடியுமா என்று சிந்திக்கலாமே?

ஏனெனில் நடுத்தர வருவாய் நாடுகளில் ஒன்றாகக் கருதப்பெறும் இசுரேல்பொதுவுடைமைக் கொள்கையைப் போற்றுவது இல்லை. என்றாலும் ஓர் ஆண்டுக்கு அதன் தனியாள் வருவாய் ரூ. 32000 (ரூபாய் முப்பத்து இரண்டாயிரம்.)

இந்த இலக்கைக் கூட இந்தியா இப்போதைக்கு எட்ட முடியாது என்றால் — பிறகு சனநாயக — மக்களாட்சி நெறிப்படியேதான் காலகாலத்துக்கும் இந்த நாடு பீடு நடை போடும் என்று பீற்றிக் கொள்வதால் ஏற்படக்கூடிய பலன் என்ன?

பங்குபோட்ட பண முதலைகள்

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியே ஏற்படவில்லையா என்றால், ஏற்பட்டு இருக்கிறது.

எதிர்பார்த்த வேகத்தில் வேண்டுமானால் அந்தவளர்ச்சி இல்லாது போயிருக்கலாம்.

ஆயினும் அந்தக் குறைந்த வளர்ச்சியையும்எழுபத்தைந்து பணக்காரக்குடும்பங்கள்பங்கு போட்டுக்கொண்டு விட்டன.

அவற்றிலேயும் பன்னிரண்டுபணமுதலைக் குடும்பங்கள் ஏழைப் பாட்டாளிகளின் உழைப்பால் விளைந்த விளைச்சல்களையெல்லாம் அறுவடை செய்து கொண்டு கொழுத்துப் போயின.

மிக அதிகமான சொத்துடைய அந்தக் குடும்பங்கள் சிலவற்றின் கோடிக்கணக்கான வரவு—செலவுகளோடு சில மாநில அரசுகளின் வரவு—செலவுத் திட்டங்கள் கூட கிட்டே நெருங்க முடியாது!

அந்த அளவுக்குச் சில பண முதலைக் குடும்பங்கள் செல்வச் செழிப்பில் ஆதிக்கம்செலுத்துகின்றன.

அந்தப் பண ஆதிக்கத்தின் வேரைப் பறித்தெறிவதற்கு மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் போன்றவர்கள் குரல் கொடுத்துப்பார்க்கிறார்கள்.

அவர்களுடைய சமதருமக் குரல் நாடெங்கும் எதிரொலிக்குமா? அதற்கு நல்லதோர் வெற்றி கிட்டுமா?

அப்படிக் கிட்டவேண்டுமென்றால் முதலில் ஜார்ஜ் பெர்னாண்டசு அவர்களின் கரத்தை வலுப்படுத்த அவரது கட்சிக்காரர்களே முதலில் முழு ஒத்துழைப்புத் தர வேண்டுமே?

செய்வார்களா?

நடைபாதைக் குடும்பம்— நட்சத்திர ஓட்டல்!

ஆனால் இப்போது மைய அரசு எடுத்திருக்கும் ஒரு முடிவு நமக்கு மனக்கவலை அளிப்பதாகவே இருக்கிறது

நடைபாதைக் குடும்பங்கள் பெருக விடலாமா?

அவர்களுக்கு வீடு வாசல் அமையும்படியான நல் வாழ்க்கை அமைத்துத் தர வேண்டாமா? இந்த நிலையில் நட்சத்திர ஓட்டல்கள்' நம் நாட்டுக்குத் தேவையா?'— என்றெல்லாம் நெஞ்சம் புழுங்கி நாம் கேள்விகளை எழுப்ப நினைக்கிறோம்.

இதே வேளையில் — ஒன்பது கோடி ரூபாய்ச் செலவில் ஒரு மாபெரும் உணவு விடுதியை — 'ஓட்டலை' கட்டுவதற்கு மைய அரசு நிதிஒதுக்கீடு செய்கிறது என்றால் அது என்ன நீதி — நேர்மை?

இதுதான் ஏழைகளை வாழ வைக்கும் ஏற்பாடா?

இன்றைக்கு வேலையில்லாமல் வேதனைத் தீயில் கருகிடுவோர் தொகையே ஒரு கோடியே பதினொன்று இலட்சத்துக்கு மேல் உயர்ந்து நிற்கிறது. அதுவும் நடப்பு ஆண்டான 1976—78—இல் மட்டுமே இதுவரைக்கு ஒன்பது இலட்சம்பேர் வேலை தேடும் படலத்தில் கூடியிருக்கிறார்கள்.

புதுமைப் பொருளாதாரம் பூக்கட்டும்!

அவர்களுக்கெல்லாம் ஒரு வேளைஉணவுக்குக்காவதுஉருப்படியான வேலை கொடுக்க எண்ணுவதை விட்டு விட்டு வெள்ளம் போல் பணத்தைச் செலவழிக்கும் வீணர்களுக்காக ஆடம்பர விடுதிகள் கட்டுவது அநீதி இல்லையா?

இனியாவது இந்தியப் பொருளாதாரம் ஏற்றம் பெறுவதுபற்றிப் பாட்டாளிகளை மறக்காத மன உணர்வோடு புதிய கொள்கைகள் வடிக்கப்பட வேண்டும்.

உற்பத்தியைப் பெருக்குதல் — உழைப்பாளிகளின் வசதிகளையும் பெருக்குதல்— பணக்காரர்களின் வசதிகளுக்கு வரம்பு கட்டுதல்— பாட்டாளிகளின் பட்டினி நிலைக்கு முடிவு கட்டுதல்— என்கிற போக்கில் அந்தத் திட்டங்கள் உருப்பெற வேண்டும். பலர் உழைப்பது; சிலர் உறிஞ்சிக் கொழுப்பது —என்கிற மேடு—பள்ளங்கள் உடனடியாக நிரவல் செய்யப்பட வேண்டும்.

பொருளாதாரம் என்பது ஒரு பெரிய யானை. அதனை இந்தச் சிறு கட்டுரை என்னும் வளையத்தினுள்ளே நுழைக்க முடியாதுதான்.

என்றாலும் ஒரு சாதாரண 'பாமரனின்' அறிவோடு பார்த்தாலும் இந்தியப் பொருளாதாரம் இடுப்பொடிந்து கிடப்பதாகவே தெரிகிறது. அதைப் பற்றி எச்சரிப்பது நம் கடமை என்று கருதுகிறோம்.

நடைபாதைக் குடும்பங்கள் —

கடனில்முழ்கிக் கண்ணீர்க் கடலில் மூழ்குவோர்—

'பட்ட பாட்டுக்குப் பலன் இல்லையே?' என்று ஒட்டிய வயிற்றோடு உழலும் உழவன் —

உருக்குலைந்து வாடும் தொழிலாளி —

இவர்களையெல்லாம் புறக்கணித்துவிட்டு இந்தியா ஏறு நடை போடுவதாக எப்படிக் கூற முடியும்?

— இவர்களுக்கெல்லாம் இருண்ட வாழ்வு எத்துணை காலத்துக்கு நீடிப்பது?

அவர்களது இல்லங்களிலே வளம் கொஞ்சும் புத்தொளி என்றைக்குத்தான் சுடர் விடுவது!

நிதித்துறை மூலம் திட்டங்களைத் தீட்டுவோர் ஏழை இந்தியனை இனியேனும் எண்ணிப் பார்த்துச் செயலாற்றுவார்களா?

அப்படி எண்ணிப் பார்ப்பார்களானால் அழகுக்கு அழகு சேர்க்கும் தங்கத்தை ஏழையின் ஏக்கத்திற்குரிய கனவுப் பொருளாக மாற்றி எங்கோ பணமலையில் ஏறி நிற்பவர்களிடம் ஏலம் கொடுப்பார்களா?

என்றாலும் விரைவிலேயே வறுமையை விரட்டும் ஒரு புதுமைப் பொருளாதாரம் வடிவெடுக்க நாம் அயராது குரல்கொடுப்போம்;

சமாதானத்திற்கான நோபல் பரிசு!

★

உலக அரசியலரங்கில் எகிப்தும், இஸ்ரேலும் பிறவிப் பகைவர்'களாகக் சச்சை கட்டிக் கொண்டு நின்றுவருகின்றன. கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக இவ்விரு நாடுகளும் சிறிதும் பெரிதுமான பல போர்கள் நடத்தி வந்துள்ளன.

முதன்முறையாக, இவ்விரு நாடுகளுக்கும் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த எகிப்து அதிபர் சதாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் பேகினும் 'டேவிட் கேம்ப்' என்ற இடத்தில் கூடிப்பேசி 'டேவிட்கேம்ப் ஒப்பந்தம்' என்ற ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கினார்கள்.

இதற்காகச் சமாதானத்திற்கான நோபல் பரிசு இவ்வாண்டு இவர்களுக்குக் கிடைத்துள்ளது. ஏறத்தாழ பன்னிரண்டு இலட்ச ரூபாய் பரிசுத்தொகை இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். இருவருமே அத்தொகையை தங்கள் நாட்டிற்காகச் செலவிடத் தீர்மானித்துள்ளனர்



வேணியின் காதலன்

கருணாநிதி

இரவு எட்டு மணி. பட்டாளத்து ஆஸ்பத்திரி பெண் வார்டில் நர்ஸ் சூர்யா தன் கடமைகளைப் பரபரப்புடன் கவனித்து வந்தாள். அவளுடைய எண்ணம் ஏதோ ஒரு பொருளின் மீது லயித்துப் போய் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் நன்ருகப் புரிந்தது.

இளமையின் அழகு ஒளி விடும் அவளது முகத்திலே கவலையின் ரேகைகள் படிந்திருப்பது மிகத் தெளிவாக யாராலும் தெரிந்துகொள்ள தக்கதாய் இருந்தது. நோயுள்ளபெண்மணிகளுக்கு சிகிச்சைகள், உபசாரங்கள் நடத்திக் கொண்டிருந்த அவளது முகத்திலே அழகான சிவந்தஉதடுகள் முணுமுணுத்தபடியிருந்தன:

"ஏ ஆண்டவனே அவரை எப்படியாவது காப்பாற்று! அவருக்காகவே நான் உயிர் வாழ்கிறேன். அவர் என் ஜீவ காதலை இன்றைக்கு மறுத்தாலும், என்றைக்கோ ஒரு நாள் ஏற்றுக்கொள்ளத்தான் போகிருர்: அதுவரையில் நான் காத்திருக்கிறேன். அதுவரை அவரையும் வாழவிடு! அதன் பின்னும் எங்களைவாழவிடு!''

இதுதான் அந்த எழிற் பெண்ணின் பிரார்த்தனை. அவள் பிரார்த்தனையினூடே பட்டாளத்து சார்ஜண்ட் குண்டப்பன் அங்கே பிரவேசித்தான். நர்ஸ் சூர்யா அவனுக்கு மரியாதை செய்து வரவேற்ருள்.

"எப்படியிருக்கிருள் வேணி?'' இது குண்டப்பன் கேள்வி.

"பூரண சுகம் — நல்ல ரெஸ்ட் வேணும். அவ்வளவுதான்!'' சூர்யா சொன்ளுள் இப்படி.

குண்டப்பன் பேசிக்கொண்டே அவள் படுக்கையண்டை போய் நின்ருன்.

"வேணி!''என்று அழைத்தான். நோயினுல் முனகிக் கொண்டிருந்த வேணி, அவனைக் கண்டதும் கண்களை மூடிக்கொண்டு வேறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள். இரண்டு மூன்று நாட்களாய்ப் பிரக்ஞையற்றிருந்து இன்றைய தினம் விழித்திருக்கும் வேணி, குண்டப்பனைக் கண்டதும் வேறு பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டது சூர்யாவுக்கு ஆச்சரியத்தைத்தான் அளித்தது. அவள் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. குண்டப்பனும் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு சூர்யாவிடம்—'சரி, நான் வருகிறேன்' எனக் கூறியபடி அவளிடம் ஏதோ ரகசியம் கூறவேண்டுமென்று ஜாடை காட்டித் தனியாக அழைத்தான். சூர்யாவும் அந்தரகசியத்தை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

"சூர்யா! வேணி ஜாக்கிரதை! ஓடிவிட்டாலும் ஓடிவிடுவாள்!'' என்று கூறிவிட்டு அவன் வேகமாகப் போய்விட்டான். சூர்யாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஓடிவிடுவாளா? ஏன்?எதற்காக சார்ஜண்ட் அப்படிச் சொன்ஞர்? அப்படியாஞல் யார் இவள்? இதுபோன்ற கேள்விகளின் அடிமையாஞள் சூர்யா. குழப்பத்திலே எதுவும் வேலை ஓடாமல் தன் மேஜையண்டை போய் உட்கார்ந்தாள். சிந்தனை அதிகமாயிற்று. வேணியின் கட்டில் பக்கம் திரும்பிப் பார்த்தாள். திடுக்கிட்டாள், காரணம், வேணி அங்கில்லை. அவள் அந்தக் கூடத்தை விட்டு அப்போதுதான் வெளியே நழுவிக்கொண்டிருந்தாள். சூர்யா ஒரேபாய்ச்சலாகப்பாய்ந்தோடி வேணியைப் பிடித்துக்கொண்டு "எங்கே ஓடுகிருய்?'' என்று அதட்டிக் கேட்டாள்.

"அம்மா—என்னை விட்டு விடுங்கள் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு'' அந்த யுவதி அழுதாள்,

"சார்ஜண்ட் உத்தரவில்லாமல், உன்னை விடுவதா? முடியாதம்மா முடியாது!''

"சார்ஜண்ட் — அவர் யாரம்மா எனக்கு உத்தரவிட? உத்தரவிட வேண்டிய உத்தமர் ஊமையாகிக் கிடக்கிருர் தாயே! வேண்டுமாஞல் எனக்குக் கொஞ்சம் விஷத்தைக் கொடுத்துவிடுங்கள் — அந்த விரியன்பாம்பிடம் என்னை ஒப்புவிக்காதீர்கள்''

"நன்ருயிருக்கிறது நியாயம். உன்னை நம்பியிருக்கிற ஒருவரை இப்படியா ஏமாற்றுவது? உன் உடம்பு சுகமாக வேண்டுமென்று குண்டப்பன் எவ்வளவு கஷ்டப் படுகிருர்?''

"ஆமாம் என் உடம்பு தான் அவனுக்குத் தேவை. அதற்காகக் கஷ்டப் படுகிருன். கனி அழுகிவிடாமல் காப்பாற்றுகிருர்களே, ஏன்? அதன் மேல் உள்ள கருணையாலா? இல்லை; அதைச் சுவைத்துத் தின்ன வேண்டுமென்ற காரணத்தால்! அந்த வகையைச் சேர்ந்தவனம்மா இந்த வஞ்சகன்;''

"ஏன் அவர்மீது சீறி விழுகிருய்? நீ அவருக்கு வைப்பாட்டிதானே?'' கேட்டாள் சூர்யா.

"அய்யோ! சொல்லாதீர்களம்மா! அப்படி இன்னொரு முறை சொல்லாதீர்கள்! கேளுங்கள் தாயே, என் நேலிக்கதையை' புண்ணுகிப் போன உடல்களைக் கண்ணுகக் காத்துவரும் புனிதவதியே, வெறியனின் கோர விளையாட்டால் கந்தல் கந்தலாகப் பிய்த்தெறியப்பட்ட என் வாழ்க்கைச் சரிதத்தைக் கேளுங்கள்... பட்டாளத்திலே ஒரு சிப்பாய்... அவர்தான் என் பாசத்திற்குரிய கணவன். அவரைப் படாதபாடுபடுத்தி என்னையும் பஞ்சணைக்கு இழுக்கிருன், பாவி குண்டப்பன். அவர் சிப்பாய்தான்; ஆனுல் காருண்யசீலர்தாயே! என் மூச்சிலே கலந்துவிட்ட ஜீவன் அவர், என் கண் எதிரிலேயே தடியன் அவரைத் தாக்கினுன். எனக்குத் தலை சுற்றியது, கந்தா, கந்தா என்று கதறிக்கொண்டுதரையில் விழுந்துவிட்டேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும், விழித்துப் பார்த்த போது நான் ஆஸ்பத்திரியில் இருக்கிறேன்,''

"'கந்தன்!''

"ஆமாம், அம்மா! ஏன் உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

"சமீபத்தில் பட்டாளத்தில் சவுக்கடி தண்டனை கிடைத்ததே—அவரா?''

"ஆமாம் தாயே, அந்த நிலவுதான் என் இலக்கிய கீதம். அவரைத்தான் துவளத் துவள அடித்தான் அந்த துன்மார்க்கன்; துவளத் துவள அடித்தான் நான் தொத்தி விளையாண்ட தோள்கள்...என் கண்ணைப் பொத்தி விளையாண்ட கரங்கள் சண்டாளனின் சவுக்கு நுனியால் கொத்தி விளையாடப்பட்டன. அவர் கண்களிலே ரத்தம் வழிந்தது. விடவில்லையம்மா அந்தக் கொடியவன் — அவருக்கு நேராகவே என்னைக் கொஞ்சிஞன். கோர மொழி பேசிஞன். கூண்டுக் கிளி ஆக்குவேனென்ருன். அதற்குத்தான் தாயே அவசரப்படுகிருன். என் சுகத்தைப்பற்றி அக்கறைப்படுகிருன். அம்மா என்னை விட்டு விடுங்கள்! உங்கள் உடன் பிறந்தவளாயிருந்தால் ஒரு துளி கண்ணீரைக் கண்டதும் துடிக்க மாட்டீர்களா? அம்மா...என்னைக் காப்பாற்றுங்கள். இல்லா விட்டால் உங்களை விடமாட்டேன்'கெஞ்சிஞள் வேணி. சூர்யாவுக்கு மூளை குழம்பியது. விழிகள் சோர்ந்தன.

கந்தன்—தற்போது வேணியின் கணவன்—ஒரு காலத்தில் சூர்யாவின் குடும்பம் செல்வத்திலே மிதந்தது. சீரும் சிறப்பும் மிக்க மாப்பிள்ளைகள் சூர்யாவின் வீட்டு வாயிலிலே காத்திருந்தார்கள். அந்தத் தனவந்தர் வீட்டுப் பெண் எப்படித் தரித்திர நாராயணனும் கந்தனுக்கு மாலையிட முடியும்? புரோகிதர் குறித்த நல்லதோர் நாளில் சூர்யா குட்டப்பட்டி முதலியாரின் மகனுக்கு மனைவியாஞள்.

சூர்யா அக்கினி சாட்சியாகத்தான் மணந்தாள். மணப்பந்தலில் அம்மி மிதித்து அருந்ததியைத்தான் சந்தித்தாள். இருந்துமென்ன? பத்தாவது மாதத்தில்சூர்யா விதவையாகி விட்டாள்; பாவம். சூர்யாவைச் சுற்றி வீசிய சூருவளி அத்தோடு நின்றதா? சொத்து சுகத்தையெல்லாம் ஹைகோர்ட்டின் படிக்கட்டுகளைக் கடப்பதிலேயே அவள் அப்பா கழித்து விட்டார். அதுமட்டுமா? குறுக்கு வழியிலே வந்த செல்வம் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் குறுக்கு வழியாகவே சென்று விட்ட கவலையில் அவரும் மண்டையைப் போட்டு விட்டார்.

அப்பாவை அடக்கம் செய்துவிட்டு, மறுநாளே சூர்யா, நர்சிங் பள்ளியில் சேர்ந்தபின் அப்போதெல்லாம் அவள் அருமருந்தாம் கந்தனைச் சந்திக்கலாம்; கந்தர்வ லோகத்திலே உலாவலாம் என்று கனவுகூடக் கண்டதில்லை. மனிதன் நினைப்பதைப் போலவா எல்லாமே நடக்கின்றன?

கந்தன் ஆஸபத்திரிக்கு நினைவிழந்துதான் வந்தான். சூர்யாவின் நினைவிலே மீண்டும் புகுந்து கொண்டான்.

இந்த நேரத்திலேதாஞ தன் காதலுக்கோர் போட்டிக்காரியாக வேணி முளைக்க வேண்டும்? யார் இந்த வேணி? எப்படி அவள் கந்தனுக்கு மனைவியாஞள்? என்பனவற்றைக் கேட்டறிய வேண்டுமென்று சூர்யாவுக்கு ஆசைதான். ஆஞல் இவைகளையெல்லாம் விசாரித்துத் தன் வேதனையை அதிகரித்துக் கொள்ள அவள் விரும்பவில்லை.

தன் மென் தோள்களிலே துயில் கொண்ட கந்தனை வேருெரு பெண்ணும் வேணி உரிமை கொண்டாடுவதா? சூர்யாவால் வேணியின் காதல் போட்டியை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை, ஆசைக்கனவுகளைப் புதுப்பித்துக் கொள்ள சூர்யாவுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, ஆமாம்... மருந்து கொடுப்பது போல வேணிக்கு விஷம்கொடுத்துக் கொன்று விடலாம்...பின்னர் கந்தன் வேணியை மறந்து விடுவான்...இடத்தைப் பின்னர் சூர்யா பிடித்துக் கொள்ளலாம்...

அருமையான யோசனை தான். சூர்யாவின் மென்மை இருதயமோ இந்தக் கோர நினைப்பால் நைந்துபோனது. பிளாரென்ஸ நைட்டிங் கேல்களின் அரும்பெரும் தொண்டுகளால் ஏற்றம் பெற்ற நர்ஸ் தொழிலுக்குக் கேவலம்ஒரு காதல் விவகாரத்துக்காகக் களங்கம் கற்பிப்பதா?

சூர்யாவின் உள்ளம் ஒரு போர்க்களமாகியது. அவளையறியாமலே வாய்மட்டும் முணுமுணுத்தது!

"அவள் வாழட்டும்... வேணியின் வாழ்வு புத்துயிர் பெறட்டும்!'' அந்தத் தியாகச் சின்னம் இப்படித்தான் மொழிந்தது.

மலர்ந்திருந்த அவளுடைய செந்தாமரை முகம் இறுகிப் போன அல்லிமொட்டுப் போலாயிற்று. சோகத்தின் மின் வேகத் தாக்குதலால் அவளுடைய உதடுகள் கருத்துப்போய் வெடிப்பு விழுந்தது.

"எழுந்திரு! கலங்காதே; அவருக்கு நான்தான்சிகிச்சை செய்கிறேன்'' துக்கம் தோய்ந்த குரலிலே ஆறுதல் கூறிஞள் சூர்யா.



சூர்யாவின் இந்த வாய்மொழி கேட்டதும், வேணியின் முகத்திலே மகிழ்ச்சியின் சாயல் படிந்தது.

"எப்படியம்மா இருக்கிறது இப்போது? பேசுகிருரா? வேணி என்று என் பெயர் சொன்ஞரா?''

"ஆமாம், ஒருநாள் உன் பெயரைச் சொல்லிப் புலம்பிஞர்.''

"புலம்பிஞர்! என்ராஜன் புலம்பிஞர்! எங்கேயம்மா இருக்கிருர் இப்போது?''

"அவர்பட்டாளத்துஆஸபத்திரியில்தான் இருக்கிருர், நான் கூடச் சிறிது நேரத்தில்போக வேண்டும் சிகிச்சை செய்ய! '

"அம்மா கவனித்துப் பார்த்துக் கொள்ளுங்கள் அவரை. என் சிந்தையில் சித்திரமாகிவிட்டவருக்குச் சிகிச்சை செய்யும் அந்தக் கைகளைக் கொடுங்கள்' கொடுங்களம்மா கொடுங்கள்!'' நர்ஸ் சூர்யாவின் பூக்கரங்களைப் பிடித்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டாள் வேணி!

'வேணி!'' — இதயத்தின் அடித்தளத்திலிருந்து பெருமூச்சின் துணைகொண்டு உதிர்த்தாள் சூர்யா. அவளது கடைக்கண்களின் ஓரத்தில் அரும்பு விட்டிருந்த கண்ணீர் மார்பகத்தில் விழுந்தது.

"வா வேணி, உன் கண்ணிறைந்த அந்த மன்னவரைக் காட்டுகிறேன் வா!'' என்று கத்திக்கொண்டேவேணியின் கையைப் பிடித்து இழுத்தாள் சூர்யா. அப்போது ஆண்கள் வார்டிலிருந்து ஒரு தள்ளு வண்டி வந்துகொண்டிருந்தது.

"ஏன் மிஸ்டர் தாமோதர், எந்த 'பெட்' பேஷண்ட் இவர்? என்ன ஆச்சு?'' என்று வண்டியைத் தள்ளி வந்தவரைப் பார்த்துக் கேட்டாள் சூர்யா.

"நீ இரக்கப்பட்டு இரவும் பகலுமாய்ப் பாதுகாத்து வந்தாயே,அந்தஆசாமிதான் சூர்யா இவர்! ஆள் 'பினிஷ்' ஆகிவிட்டான்!''

"ஆ! கந்தஞ? வேணி! நம் நெஞ்சுபுகுந்தவன்செத்து விட்டான் வேணி!''

தரையில் சாய்ந்தாள் சூர்யா.

"ஐயோ, வாழ்வைத் துண்டித்த சண்டாளா, குண்டப்பா! கந்தா! கந்தா! கந்தா!'' வேணி தள்ளு வண்டியில் விழுந்தாள் — மண்டை உடைந்து ரத்தம் சிமிண்டுத் தரையைச் சிவப்பாக்கியது. அந்தச்செங்குருதியிலே, வேணியின் கருங்கூந்தல் துவைந்து கிடந்தது.

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்)

சென்ற வார இதழ் தொடர்ச்சி ரூ. 80,141-25

தஞ்சை ஜி. கரிகாலன். டி. சுப்பிரமணியன், என். ரங்கையன். வி. தம்புசாமி, கே. ஆர். கணபதி, காஞ்சிபுரம் இ. கோவிந்தராசு, திருப்பத்தூர் தங்கவேல், கும்பகோணம் பி. ஜெயராமன், சென்னிமலை கே. முருகேசன், பி இராமசாமி, ஜ. ராஜமாணிக்கம், எஸ்.கே வெங்கடாசலம், என் கே அமாசை, நாச்சிமுத்து, எல். எம். கந்தசாமி, எஸ், சின்னசாமி, கே. எம் ராமமூர்த்தி, என். இராசேந்திரன், சி செல்வராசு, வி,சுப்பிரமணியன், ஆர். தண்டபாணி, அரங்க ராசரத்தினம், எம். அப்துல்வகாப். பி. தங்கமணி, எம், சண்முகம், திருச்சி டி, வி. சிவக்கொழுந்து, கே. வேலுச்சாமி, கே. நல்லப்பன். ஏ. வீரப்பன், பி. காளியப்பன், எம். சீரங்கராயன், சேலம் பி. கிருட்டிணன், பி, டி. கோபாலன் ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250-00

காரமடை வ. மார்கசகாயம், சேலம் ஏ, இராசு, உதகை எஸ். குப்புசுவாமி, கே ஜெகதீசன், ஓமராபாத் கே, எஸ். இராமன், தெ ஆ. பி. ஏ. துரை, செங்கை ஏ. ஜி. பாஸ்கரன், கோவை நகர சலவையாளர் ஆர். வேலுச்சாமி நாயுடு, சேலம் மெட்டூர் டேம்—2 வி, ஜமீர், ஆர் கனகராசு, நா. தங்கராசு, ஆர், சந்திரா, செல்வி சரசுவதி, திருச்சி கே. கதிர்வேல், கண்ணன், சேலம் எஸ்.வி. லட்சுமிநாராயணன், எம் எஸ், சிதம்பரம், ப, க தமிழழகன், பி. கலைச்செல்வம், சி. சீனிவாசன் ஏ. சொக்கையன், என் டி. ஆறுமுகம், கே. பெரியண்ணன், எம். சாந்தப்பிள்ளை, எம். தங்கவேல், மு. இராமசாமி, எம், லெனின் என்ற குப்புசாமி. பழ. கந்தசாமி. பேபி ந. பெ. பழனியப்பன், எம் இராசகோபால், பி. சக்தி பக்தர், எம். மணி (டிரைவர்) வி. சண்முகம், பி. எஸ், மாரிமுத்து, கே. கே. நடராசன், என். வெங்கடேசன், பார்வதிமாரிமுத்து, ஆர் நஞ்சப்பன், ஆர் சீனிவாசன், பி. கோபால், வி. எஸ். தங்கப்பன், எஸ். சிவசங்கரன், ஆர். கணேசன், செல்லமுத்து. அங்கமுத்து, பி. புகழேந்தி என். நடராசன் சரோசா, கே. என். ஏ. சுப்பிரமணியம் ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250-00

முகவை. மு. அழகுசுந்தரம், ப. சுப்பிரமணியன், செ. தனுசுகோடி, ச. க, வாழவந்தான், எஸ், பி. அங்கப்பன், சென்னை—1 பி. வி. இராசேந்திரன். சென்னை - 2 ஆர். மனோகரன், சென்னை—11 கௌரி, வி. சுப்பராயன், தஞ்சை எஸ்.சுப்பையா ஆரோக்கிய சகாய ரோஸ்மேரி பூம்புகார் ஜி. அழகுசுந்தரம். இரா. வடமலை, சி. மகாலிங்கம், பி. விசுவநாதன், கே ஆறுமுகம். ஜெயராமன், வி. இராமானுசம், மதுரை கே, ஏ. அன்பு, பழனி முத்முசாமி, தஞ்சை ஏ. வி செந்தில் குமார், சு சண்முகம். வி. லட்சுமணன், ந. அ. ப. சௌந்திரபாண்டியன், வி.இராமச்சந்திரன், என். வீராசாகிப், மு, அப்துல்ரகுமான், பி. மு, முகைதீன் காதர்சா, பி.முகமதுசலாலுதீன்,எம். சுப்பிரமணியம், ஓ, எம். கபீர், பி. ஏ. ஆஜா, எம். எம். முகமது ஷரீப் சி. ஜெயராமன், புதுகை அரு. தசா. வடிவேல், தஞ்சை ஏ, மாசிலாமணி நரிக்குறவன் செல்வன். குருவிக்கரம்பை மு. இராமசாமி, வி. சேகர், பெ. துரைராஜ், ந. நீலகண்டன். அறந்தாங்கி எஸ. எம், ஆஜா, கோவை 1 ம கனகு, ஏ. நாகராசன், கோவை ஏ. வன்னியராசன், ஆர். இராசேந்திரன், டி. சண்முகம், அ. தங்கராசு. எல். பெருமாள் (சிம்சன் குருப்) இராகாருண்யன் ஆகிய 50 பேர் ரூ, 5 வீதம் 250-00

புழல் பெ. சு ஆற்றலரசு சி. ஐ. டி. நகர் பி. மதுரைமுத்து, கு. சுப்பிரமணியன், இராசா அண்ணாமலைபுரம் ப, மதிவாணன் சாலிக்கிராமம் கே.நாதன், வடபழனி ஜி. கிருஷ்ணசாமி, எஸ். சந்திரசேகரன் எஸ். ஈஸ்வரமூர்த்தி செனாய்நகர் ஏ என்.தணிகாசலம் சி. இராதாகிருஷ்ணன், எஸ. உலகநாதன், ஆர் புகழேந்தி, ஆர். லலிதா இராதாகிருஷ்ணன். சாலிக்கிராமம் எம் இராமசாமி, வடபழனி ஓ. எம். எஸ். கிருஷ்ணன், சேத்துப்பட்டு பெ.முத்து நுங்கம்பாக்கம் பி. குப்புசாமி, ரா.கிருஷ்ணன், டி. எஸ். ரங்கசாமி, ஏ. பார்த்திபன், எம் மாரிமுத்து தி. நகர் டி. மணி, பூந்தமல்லி ஆர் அங்கமுத்து, செம்பியம் ஓ. கே. கோபாலகிருஷ்ணன், மயிலை தா. வடிவேல், ஈ. சின்னையா, வியாசர்பாடி வி. பாலமுருகன், புரசை பிரியலட்சுமி,கெல்லீஸ பி ஈ ஜான்சன், புரசை ஜி. இராசேந்திரன், பெரம்பூர் டி. ஆர். இளங்கோவன், புரசை ஜ. டி. அல்போன்ஸ், எஸ். கருணாநிதி, பா. ஜான், எருக்கஞ்சேரி எஸ். திருமலை. எஸ். சந்திரசேகரன், அயன்புரம் எஸ். திருப்பதி, தட்டான்குளம் ஆர். சுப்பிரமணியம், பூந்தமல்லி என். வி. கோவிந்தசாமி, டி மணி, கோடம்பாக்கம் பி நாராயணசாமி, ஆள்வார்திருநகர் டி மணி செங்கை எம். லோகநாதன், எம் சூரன், வி. ப. பாலகிருஷ்ணன், ஆர். சந்தியப்பன், பாரிவாக்கம் ப. ஆ. வேணுகோபாலன் அரக்கோணம் பாஸகரதாஸ சேலம்-1 கே. ஜெயலட்சுமி, மேற்குமுகவை கோ. இராமர் ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250-00

பெண்ணாடம் மெய்கண்டநாதன, திருச்சி எம். எஸ். மணி, தி. மு. க. உடன்பிறப்பு, திருச்சி கோவிந்தராசன், நெய்வேலி வி. இராமன். எம். முத்துவேல் மா. சுப்பிரமணியன், தெ ஆ. பி. நாராயணன், எஸ் எஸ. பெரியசாமி, இரா. வரதராசன், நெய்வேலி ஈ வெங்கடேசன், ஏ. வெங்கடேசன், எம். இராமலிங்கம், ஜி. லட்சுமி நாராயணன், கடலூர் த. கடவுள், பெங்களூர் பி. நாகரத்தினம், எம சி. கிருஷ்ணராசு, வி. இராதாகிருஷ்ணன், பி. சுப்பிரமணி, எம். நெடுமாறன், வி. ஜெயராஜ், சென்னை 47 பி. கணபதி, செல்லையா இரத்தினமங்கலம், திருச்சி எம். வெங்கடசாமி, ஜே. மகராசன், இலால்குடி ஆர். சோமசுந்தரம், ஆ. லூர்துசாமி, அ. அரசு, திருச்சி இராமு, கே. டி. காசிம், தி. இரா. தீனதயாளன், சி. தாண்டவன், திண்டுக்கல் சிராசுதீன், திருச்சி பாலாமணி எம். மணி, ப. பால்ராசு, திருச்சி இளங்கோவன், ஆர். சாரங்கபாணி, திருச்சி எம். பூவராகசாமி, திருப்பத்தூர் எம். கனிமொழி, வ. ஆ இரா. கருணாநிதி, என். கே இராமசாமி, எம். இளங்கோவன், எம். கண்ணகி, வி. ஏம். துரைராசு, எம் சி.மாணிக்கம் கோபி என். கே. இராமகிருஷ்ணன் ஜி. வெங்கடாச்சாரி ஜி. என். மூர்த்தி ஏ. பி. குமாரசாமி ஆகிய 50 பேர் ரூ. 5 வீதம் 250-00

விழுப்புரம்முண்டியம்பாக்கம்எஸ.கலியபெருமாள்எம். தங்கவேலு பி. செம்மணி ஏ. ஜ இராமலிங்கம், எம். ரங்கநாதன் கே சகுந்தலா ஏ. எம் கண்ணபிரான் விக்கிரவாண்டி எம். தட்சிணாமூர்த்தி தெ ஆ ஆ கோவிந்தன் டி ஆர் மணி டி ஆர் முத்துசாமி செ ப கருப்பண்ணன் புதுவை ஆர் சேதுராமன் பியேர் ஆனந்தி பூபாலன் க சி சண்முகம் விழுப்புரம்அய்யாக்கணணுதிருக்கோவிலூர் குருசப்ப கோனார் வ ஆ ஏ வடிவேலு சி மாணிக்கம் கோவை பாலகிருஷ்ணன் மேட்டுப்பாளையம்ஜெகநாதன்குழந்தைவேல்கேசின்னப்பன் புஞ்சை புளியம்பட்டி வி. சுப்பிரமணி, பவானி சி. முருகேசன். கொடுமுடி ந, சுட்பையன். பொள்ளாச்சி எஸ். அங்கமுத்து, தாராபுரம் சி. கிருட்டிணசாமி; கோவை சி. ஆறுமுகம், ஜி. முடியப்பன், உடுமலை அரவேந்தன் திருப்பூர் மே, இராசகோபால், ஈரோடு இளங்கோ, நெல்லை பி. பிச்சைப்பண்டாரன். முகவை மாணிக்கம், ரூஸ். வி. சு. நடராசன், கொடைக்கானல் எஸ். வீரபூபதி, எம். முகமது அலி ஜின்னா, கோவை எஸ். அப்துல் ரசாக். நெல்லை ஆர், பழனிசாமி, வி. பாலு. சேலம் எஸ். என். இராமச்சந்திரன், பி. எஸ், கிருட்டிணன், சுந்தரராமன், ஏ. சந்திரம்மா, பி. ஆர். பாலசுப்பிரமணியர், எஸ். எஸ். சண்முகம், மொட்டையன் என்ற கு, முனுசாமி, வி. சீனிவாசன், ஆகிய 50 பேர் ரூ, 5- வீதம் 250 00

கோவை பா. வெண்ணிலா சென்னை—4 இரா. கா. கோவன் சென்னை 42 மு. இராமசாமி, ஆர். கிருட்டினமூர்த்தி, மயிலை எஸ. கிருட்டிணன். வே. மு. கணவதி, பி ஆறுமுகம், ஜி. குருசாமி ஒய். முகமது ஒய். அப்பர் அலி, சென்னை—28 பி, இராமகிருட்டிணன். கா. சுந்தரமூர்த்தி. எம். இராமநாதன். நீலகிரி பி, பார்வதி, கோவை கே. பி. முத்துக்குமரர், ஐ. பழனிசாமி, ஐ. வெங்

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 2500

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இப்போது பேசுபவர் அப்போது என்ன செய்தார்?

"ஜனதா ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள் எத்தனை விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டுள்ளன. கோடிக்கணக்கில் பணம் வீணாகிறது. இவ்வளவு கோடி பணத்தை வைத்து எத்தனை கோடி ஏழை மக்களுக்கு உதவி புரியலாம். வேலைவாய்ப்பு, கிராம வளர்ச்சி. கல்வி என்று எத்தனையோ திட்டங்களை இந்தப் பணத்தைக் கொண்டு செயல்படுத்தினால் (விசாரணைக் கமிஷனுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை) ஒருவரும் ஏற்க மாட்டார்களா; என்ன?'

சிக்மகளூரில் 'டிஸடிரிபீல்' என்ற இடத்தில் பொதுக் கூட்டத்தில் பேசியபோது இந்திரா காந்தி சொன்ன மணிவாசகங்கள்.

(24-10.78 தினமலர் பக். 4 பத். 5)

தானைத்தலைவர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் மீது வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் (சர்க்காரியா கமிஷனை) நியமித்து கோடிக்கணக்கில் பணம் செலவானபோது வராத ஞானோதயம் 'ஷா' கமிஷன் என்றதும் வருகிறதோ. வரத்தானே செய்யும்! தனக்கு வந்தால் தானே தலைவலி தெரியுமென்பார்கள்! எப்படியோ இப்போதாதாவது அப்போது வராத ஞானோதயம் வந்ததே! அதுவரையில் சரிதான்!

செங்கை செ. திவான்

★★★★★★★★★★★★



பிரதிநிதி

கே. எம். ஜி. மாதவன்
11,புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை - 4.

★★★★★★★★★★★

எம். ஜி. ஆர். வீசிய பந்து!

தமிழகத்தைப் பொறுத்த அளவில் போராட்டங்கள் என்பது விடுபட்டுப் போன கொள்கை அல்ல.

எந்தக் கட்சி ஆளும் பொறுப்பில் இருந்தாலும் எதிர்க் கட்சிகள் கோரிக்கைகளை முன் வைப்பதும். அரசு ஏற்காவிட்டால் போராட்டம் நடத்துவதும் இயல்பான செயல்தான். அப்போதெல்லாம், ;போராடுபவர்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுவதில்லை.

1974 ஆம் ஆண்டு எம். ஜி, ஆர். 'பந்த்' நடத்திய போது 'ரசிக மணிகளின் வன்முறை வெறியாட்டங்களைக் கண்டு வெகுண்டு எழாமல்; போராட்டத்தை நடத்தியவர்களுக்கு இன்னல் விளைவிக்காமல் அமைதி காத்தது கழக அரசு:கலைஞர் அரசு, ஏதனை மககள் மறந்திருக்கமாட்டார்கள். ஆனல் இன்றைய அரசு 'சர்வகட்சியினர் நடத்தும் போராட்டம்' என்ற உடனேயேமினிமிசாசட்டத்தைப் பயன்படுத்த துணிந்தது எத்தகைய சர்வாதிகாரட்போக்கு என்பதை உணர வேண்டும்

மக்களின் வரிப்பணம் போராட்டம் என்ற பெயரால் பாழ்படுத்தப்படுகிறது. என்கிறர் முதல்வர்

இரயில் பெட்டிகளைப் போல பல பஸ்களை ஒன்றுகச் சேர்த்து பயணிகள் இல்லாமலே ஓட்டிச் சென்றது வீண் செலவு இல்லையா? இது சரியான முறையா?

காவல் துறையினர் பயணம் செய்வதாக பஸ்களில் போஸடர் ஒட்டப்பட்டு காவல் துறையினராலேயே பஸ்கள் ஓட்டப்பட்டதே இது முறையா?

போராட்டத்தை முறியடிக்க இதுதான் சிறந்த வழியா?

எதற்கெடுத்தாலும் எந்தக் கிளர்ச்சி நடந்தாலும் 'அதனை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று முதல்வர் பேசுவதன் பொருள் என்ன?

'தொண்டர்கள் என்ற போர்வையில் குண்டர்களின் அட்டகாசம் தானே தலை தூக்குகிறது!

சோடா பாட்டில் வீச்சு
கல்லடி
சொல்லடி

இவைகளையே நம்புவதன் மூலம் அரசியலை நடத்தலாம் என்ற தப்புக் கணக்கு தொடருகிறது;

செடியை வளர்க்கத் தண்ணீரை ஊற்றுவதை விட்டு விட்டு வெந்நீரை ஊற்றுகிறர்கள் கலைஞரின் இல்லத்தைத் தாக்கியதன் மூலம் கழகத் தொண்டர்களின் நெஞ்சங்களில் கனலை அள்ளி வீசி இருக்கிறர்கள்.

சர்வாதிகார எண்ணம் எம், ஜி. ஆர். மனத்தில் குடி கொண்டு விட்டது. அதன் பலன் தலைவன் எவ்வழி அவ்வழி ரத்தத்தின் ரத்தங்களும் நடைபோடத் துவங்கி விட்டார்கள்;

கி. காசிவிசுவநாதன்

தமிழினத் தலைவர் கலைஞரின் இல்லம் தாக்கப்பட்டிருப்பதற்கு மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலசுப்பிரமணியம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் உள்ள கருத்தைக் கவனிக்க வேண்டும்

... சட்ட மன்ற எதிர்க் கட்சித் தலைவரின் வீடு தாக்கப்பட்ட கொடூரமான நிகழ்ச்சி ஆளும்கட்சிகளைச் சேர்ந்த குண்டர்களின் மனோ நிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு இந்தப் போக்கு காலா காலத்தில் கட்டுப்படுத்தப்படாவிடில் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று ஆளும் கட்சியை எச்சரிக்கவிரும்புகிறேன்'' இது அனைத்து எதிர்க் கட்சிகளின் எண்ண வடிவம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்

கோழிக்குஞ்சு இதயம் படைத்தவர்கள் புலிகளைப் பூனைகளாய் எண்ணுகின்ற வேடிக்கை விளையாட்டை விட்டுவிடவேண்டும்.

காட்டாற்று வெள்ளம் கலைஞரின் கட்டளை எனும் அணையால் கட்டுப்பட்டு நிற்கிறது.

கட்டுப்பாடு எனும் காவலுக்குள் கழகத் தொண்டன் கட்டுப்பட்டு நிற்கிறன்.

அறிஞர் அண்ணாவின்தம்பிகள் அச்சுறுத்த லுக்குஅஞ்சுபவர்கள் அல்லர்; கலைஞரின் உடன் பிறப்புகள் ஊளை வாயரின் உருட்டல் மிரட்டல்களுக்கு மிரண்டு விடுகின்ற கோழைகள் அல்லர்

அரசியலை அரசியலாலேயே சந்திக்க நினைப்பவன் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்.

அடக்கு முறை
ஆணவம்
அதிகாரம்
வென்றதாக வரலாறும் இல்லை

திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு அண்ணா தந்தது 'கடமை. கண்ணியம் கட்டுப்பாடு''

கலைஞர் தந்திருப்பதுகனிவு துணிவு பணிவு''

!இரத்தத்தின் ரத்தங்களுக்கு எம். ஜி. ஆர். போதித்திருப்பது 'அறியாமை,
பொறுமை கயமை

என்பதை நாடு உணரத் தலைப்பட்டு விட்டது.

கழகத் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் ஆற்றல் படையின் ஒப்பற்ற தளநாயகன்! சலசலப்புகளைக் கண்டு அஞ்சிடாத அரிமா! சமுதாயச் சீர்திருத்தத்தின் முன்னேடி! தமிழினத்தின் காவலன்!

நாலரைக் கோடி தமிழ் மக்களின் எதிர் காலம் கலைஞர் கையிலேதான் இருக்கிறது என்டதை வரலாறு கூறப் போகிறது; அந்தக் காலம் வெகு தொலைவில் இல்லை,

எதிர்க் கட்சியாக இருந்த போது எம். ஜி. ஆர். எதற்கெடுத்தாலும் பந்த், கிடுகிடு போராட்டம் என்று அறிவித்துக்கொண்டிருந்த நிலை மாறி அவர் அன்று வீசிய பந்தே, இன்று திரும்பி வந்து அவர் மீது தாக்குகிறது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பதும் உறுதியாகிறது.

நிதி அனுப்பியோர் விவரம்...

(8-ம பக்கத் தொடர்ச்சி)

இ. சாமி, இரா, வேலுசாமி, ரகுநாதன், என். தங்கையன், நெல்லை, செ. முருகன், க. முருகன், சா. ராமலிங்கம்' செ. சிதம்பரம். நெல்லை சி பழனிச்சமி, முகவை ச. செயராசு, ஆர். ஆறுமுகம், நெல்லை பேராச்சி, முகவை ச. செ. சுப்பிரமணியம். எஸ். இராமச்சந்திரன், காரைக்குடி-4 பன்னிர் செல்வன், முகவை ம. அ. செ.மவர் சேர்வை, எஸ. மகிமைதாஸ். ஆ. ஜோசப், நெல்ன ச. சுப்புலட்சுமி, சோம. ச, சோமசுந்தரம். முகவை மு, இராணி, கோவை என். சவுடு, டி. பாலசுப்பிரமணியம், டி. இளங்கோ, நெல்லை உ. இராம கிருட்டிணன், கோமதி அம்மாள், ஏ. பொன்னையா. ச. நடராசன். ச. சேதுபொன்னம்பலம், கோவை—30 கே. ஏ. ஆறுமுகம். திருமலைசாமி எஸ். கபீர, எஸ- கிருட்டிணமூர்த்தி, டி. இாாசமாணிக்கம் ஆகிய 50 பேர் ரூ. 5 - வீதம் 250 00

மேட்டுப்பாளையம் ஏ. கிருட்டிணசாமி ஆச்சாரி திருச்சி எம். கோவிந்தராசன், வி. தியாகராசன் பி. முகில்குமார், மு. சுப்பிரமணியம், சி. சம்பூரணத்தம்மாள், ஏ. அப்பாவு, ஏ. சரோசா, எஸ. சேதுராமகிருட்டிணன், எம். செகநாதன், ச. சு. மணி, வெ. ந. சின்னையன், க. இராமர், சி, இமயவரம்பன், வி. ரங்கசாமி, ஆர். வரதராசன் பி. சுப்பிரமணியன்,பெ. இரவீந்திரன்,எஸ். திருப்பதி, ஏ. முத்தையா, ஆர். உமாபதி, பி.மாரிமுத்து, எம். துரைராஜ், எம், முத்தையன், இ, அப்துல்காதர், எம். ஆறுமுகம், வி. குருசாமி, ஆர் நாராயண அய்யர், கே. நடேசன். மா. சுப்பிரமணி, மு. மாணிக்கம், ம. இராசலிங்கம், அ. இராசேந்திரன் டி. என். பாஸ்கரன், எஸ். கருப்பன், வி. வேலாயுதம், வி. கங்கேஸ்வரன், குஞ்சிதபாதம், டி. நாகராசன், ஜி. டி. அருள்நாதன், வி. சாமி, ப. வீராசாமி, கு. கலியபெருமாள், மு. ஆறுமுகம், வி. சண்முகம். தெ. ஆ. ந. இராசமாணிக்கம், திருச்சி அஸ்ஸனு, துரைஅரசன், அம்மாவாசை, கந்தசாமி ஆகிய 50 பேர்வீதம் 250 - 00

ஆக மொத்தம் ரூ. 82,141 — 55

ஆசிரியர்களின் அவல நிலை!

ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5-ஆம்—நாள் இந்தியா முழுக்க 'ஆசிரியர் தினம்' கொண்டாடப்படுவது தவறுவதே இல்லை.

ஆனல் —

டில்லியிலிருக்கும் ஆசிரியர் பெருமக்களின் அவல நிலைக்கு என்றுதான் விடிவுகாலம் பிறக்குமோ தெரியவில்லை:

நெருக்கடி நிலையின்போது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆட்களைப் பிடித்துவராத ஆசிரியர்களை வேலை மாற்றங்கள் – வேலை நீக்கங்கள் மூலம் பழிவாங்கியது டில்லி நிர்வாகம் தொடர்ந்து இப்போதும் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வருகிறர்கள்.

காரணம்தான் வேறு —

மதவெறி பிடித்த இயக்கமான ஆர். எஸ். எஸ். சின் கொள்கையைப் பிரச்சாரம் செய்யாத, அதற்கு ஆதரவாக இல்லாததாலேயே இப்போது ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டு வருகிறர்கள்

பழிவாங்கல்களின்முதற்கட்டமாக ஆசிரியர்கள் நீண்ட தொலைவிற்கு வேலை மாற்றம் செய்யப்பட்டு வருகிறர்கள்.

திருலோக் சந்த் என்ற ஆசிரியர் டில்லியின் மத்தியிலிருக்கும் ஓர் பள்ளியில் பணியாற்றி வந்தார். எந்த ஒரு காரணமும் காட்டாமல் டில்லி நிர்வாகம் அவரை 'சாங்கு' என்ற இடத்திற்கு மாற்றியது. அந்த இடம் ஹரியானு எல்லையில இருக்கிறது.

மனமுடைந்த ஆசிரியர் வீட்டுக்குச் சென்றவுடன் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்!

அதேபோல் நீண்டதொலைவிற்குவேலைமாற்றம் செய்யப்பட்ட இன்னொரு அசிரியருக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது,

ஏறத்தாழ நான்காயிரம் ஆசிரியர்களின் பெயர்கள் வேலைமாற்றப் பட்டியலில் உள்ளன. டில்லி நிர்வாகத்தினரின் இந்த யசேச்சதிகாரமான போக்கினல் ஆசிரியைகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்:

ஆர். எஸ், எஸ் இயக்கத்தாரால் தூண்டிவிடப்படும் டில்லிநிர்வாகத்தின்இந்தப்போக்கை எதிர்த்து ஆசிரியர் சங்கம் போர்க்கொடி உயர்த்தியுள்ளது.

ஆசிரியர் சங்கம், மக்கள் ஆதரவுடன் வேலை மாற்ற உத்தரவுகளை நீக்கக்கோரி மாபெரும் ஊர்வலம் நடத்திக் கோரிக்கை விடுத்த போதிலும், டில்லி நிர்வாகத்தினர் கேளாக்காதினராக இருந்து விட்டனர்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலிருந்து பயிற்சி பெற்று வருபவர்களையும், அதன் ஆதரவாளர்களையும் ஆசிரியர் பணியில் அமர்த்தவே இந்த வேலை மாற்றங்களும், நீக்கங்களும் செய்யப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது.

(ஆதாரம்: 'நியூ ஏஜ்' 8-10-78)

புனித ராஜ்யம்....

(முதற்பக்கத் தொடர்ச்சி)

விழுந்ததும் — பாலம்மாவுக்கு முகம் பரவசத்தால் மலர்ந்தது. இருந்தாலும் அதைப் பெற முடியாமல்இடையூறு ஏற்பட்டு விட்டதே என்ற ஏமாற்றமும் உடனே வெளிப்பட்டது. அப்போது வாயிற்புறத்தில்டாக்சி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. பாலம்மா அண்ணுச்சியையும் நொண்டியையும் பாட்டில்கள் சகிதம்உள்ளேயிருந்த அறைக்குள் போகச்சொல்லிவிட்டு, அறைக் கதவை சாத்தி வைத்துவிட்டு— எதுவுமறியாதவள் போல கையில் புராணப் புத்தகத்தை விரித்துஎடுத்து கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சில நிமிடங்களுக் கெல்லாம். சுந்தரி உள்ளே நுழைந்தாள், அத்தை' என்று அன்புடன் அழைத்தவாறு)

பாலம்மா: வாம்மா சுந்தரி!.. என்ன திடீர்னு வந்துட்டே.., போன வேலை என்ன ஆச்சு?..., என்கிட்டே காலையிலே தான் வருவேன்னுசொல்லிட்டுப் போனே?

சுந்தரி: ஆமாம் அத்தே! அவரை இன்னைக்கே ஜாமீன்ல எடுத்துடலாம்— அவர்வந்த பிறகு ஒரு ஒட்டல்ல தங்கி, ஒரு வாடகை வீடு பாத்துட்டு — நாளைக்குக் காலையிலேவந்து இங்கே இருக்கிற சாமானையெல்லாம் எடுத்துகிட்டுப் போகலாம்னு நினைச்சேன். ஆனா, நீங்க ஏற்பாடு செய்த வக்கீல் எவ்வளோ கஷ்டப்பட்டுப் பார்த்தார் கோர்ட்டிலே ஜாமீன் ஆர்டர் வாங்கியாச்சு! இருந்தாலும் — அவரை நாளைக்குத்தான் விடுதலை செய்ய முடியுமாம்.

அந்த வக்கீல் சொன்னாரு; தியாகராயநகர்லே ஒரு வீடு வாடகைக்கு இருக்குன்னு; அதைப் போயி பாத்துட்டு காலையிலே வேலன் வர்ரதா சொன்னதாலே - நான் மாத்திரம் வந்துட்டேன்.

பாலம்மா: பரவாயில்லை பரவாயில்லை; நீ வரமாட்டேன்னு நினைச்சு நான் சமையல் கூட பண்ணலே...அதனாலஎன்ன; ஒரு நிமிஷம் சமைச்சிடுவேன்

சுந்தரி: வேண்டாம் அத்தே! நானும் உங்க வக்கீலும் வேலனும் இப்பத்தான் ஒரு ஓட்டலிலே சாப்பிட்டோம.

பாலம்மா: சுந்தரி கண்ணு, காலையிலிருந்து அலைஞ்சது ரொம்பவும் களைப்பாயிருக்கே! பாத்ரூம்ல சூடா தண்ணியிருக்கு— போயி குளிச்சிட்டுஜோரா டிரஸ்பண்ணிக்க போ!...

சுந்தரி: இப்ப எதுக்கு குளியல்?... காலையிலே குளிச்சுக்கிறேன் அத்தே!...

பாலம்மா; சரிதான்! அத்தை வீட்டுக்கு வந்தபெண்ணு ஒரே அழுக்காகவா இருக்கிறது வா! வா! இதோ பாத்ரூம் - நல்லா குளிச்சிட்டு வாடா கண்ணு'.

[பாத்ரூமுக்குள் சுந்தரி போகிருள்]

(காட்சி முடியவில்லை)

(தொடரும்)

அரியானாவில் ஒரு மனு நீதிச் சோழர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மானபங்கம் ஏற்படக்கூடிய நிலைமையே உருவெடுக்காதே!

ஆனால் இன்று நாட்டின் நிலைமை என்ன?

இந்திரா மகனின் தந்திரங்கள் எத்தனை?

மக்களாட்சி நெறியின் மாபெரும் காவலராக—சன நாயகக் கண்ணின் தலைசிறந்த இமையாக விளங்கிய பண்டித சவகர்லால் நேரு பெற்றெடுத்த இந்திரா காந்தி அம்மையார் எவ்வாறு நடந்து கொண்டார்?

தமது ஆட்சி நிருவாகத்திலே தம்முடைய மகன் சஞ்சய் காந்தியின் குறுக்கீட்டுக்கு இடம் அளித்தார்,

மாருதிகார் ஊழல்நாற்றம் எடுத்து இந்தியா முழுவதையுமே மூக்கைப் பிடித்துக் கொண்டு திணறச் செய்திருக்கிறது.

அது மட்டுமா?

இந்திய ஆட்சிப் பொறுப்பையே தமது குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாக்கிவிடும் எண்ணத்தோடு இந்திரா காந்தி தமது மகனைப் பட்டங் கட்டாத இளவரசராகவே 'பவனி' வரச் செய்தார் நாடெங்கும்!

அந்த சஞ்சய் காந்தியினால் எத்தனை ஆளுநர்கள் அலட்சியப்படுத்தப்பட்டார்கள்! எத்தனை முதலமைச்சர்கள்— அமைச்சர்கள் பதவி இழந்தார்கள்! எத்தனை மைய அமைச்சர்கள் துறை மாற்றத்துக்கு—இலாகா மாற்றத்துக்கு இலக்கானார்கள்! எத்தனை அதிகாரிகள் பொறுப்புகளை இழந்தார்கள்! எத்தனை வீடுகள் இடித்தெறியப்பட்டன! எத்தனை இளைஞர்கள் மண் வாழ்க்கையையே மண் மேடு ஆக்க நேர்ந்தது! ஏன், எத்தனை ஏழைகளின் வாழ்வே எரிந்து கருகிற்று!

என்றாலும், தம் மகன் செய்த தகாத குற்றங்களை அன்னை இந்திரா நேர்மையோடு கண்டித்தாரா? அவற்றுக்காக மகனைத் தண்டித்தாரா?

பிள்ளைப் பாசம் நீதி உணர்வுக்கே கொள்ளி வைக்கலாமா?

ஆனால் இந்திராவின் ஆட்சிக் காலத்தில் அந்த இரத்த பாசம் நீதித் தாயின் விழிகளிலிருந்து இரத்தக் கண்ணீரைத் தான் வடிக்கச் செய்தது!

பிள்ளைப் பாசம் கொள்ளி வைப்பதா?

பொதுவாக இன்று இந்திய அரசியல் தலைவர்களை எடுத்துக் கொண்டாலே அவர்களது புகழுக்குப் புதைகுழியைத் தோண்டுகின்றவர்கள் - அவர்களுடைய பிள்ளைகளாகவும், உற்றார் உறவினர்களாகவுந்தான் இருக்கிறார்கள்.

அந்தத் தலைவர்களும் பொதுவாழ்க்கையில்ஈடுபட்ட பிறகு சொந்தப் பிள்ளைப் பாசத்தைத் தூரத்தள்ளி வைத்துவிட்டு மற்ற மற்ற ஏழை, எளிய, பாட்டாளி மக்களின் பிள்ளைகள் மீதுதான் பொதுநலப் பாசத்தைப் பொழிய வேண்டும் என்பதை உணர மறுக்கிறார்கள்.

இந்த நிலையில் —

அரியானா முதலமைச்சர் தேவிலால், "தவறு புரிந்து விட்ட தம் மகனின் உறவைத் தள்ளிவைப்பேன்!" என்று துணிச்சலாகத் துறந்திருப்பது வரவேற்கத்தக்கதேஅல்லவா?

பிள்ளைப் பாசத்தை வெல்வது என்பது இடலாத செயல்தான்.

அவ்வாறு வெல்ல முடியாமல் அயோத்தியை ஆண்ட தசரத மன்னன் உயிரையே விட்டதாக இராமயணக்கதை கூறுகிறது.

தம்முடைய மகன் ஹுமாயூன் எப்படியாவது பிழைக்க வேண்டும்என்பதற்காகத்தமது உயிரையே காணிக்கை ஆக்கத் துணிந்தார் பாபர் என்று மொகாலய வரலாறு மொழிகிறது.

ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் — நேர்மையின் முன்னே பிள்ளைப்பாசம் ஒரு தூசு என்று நிலைநாட்டியவர் மகாத்மா காந்தியடிகள்:

தம்முடைய மகன் தகாத வழிகளில் நடக்கிறான் - குடிக்கிறான்—என்று கேள்வியுற்றதுமே தமக்கும் தம் மகனுக்கும் ஒட்டுறவு ஒரு துளியும் இல்லை என்று இரத்த பாசத்தையே வெட்டியெறிந்தவர் காந்தியடிகள்.

அவர் தம் அடிச்சுவட்டில் தான் தேவிலாலும் இப்போது நடைபோட்டிருப்பதாகச் சிலர் நினைக்கலாம்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்த மட்டில் தேவிலாலின் பிள்ளைத் துறப்பு பற்றி எண்ணும்பொழுது இதயத்திலே எழிலோவியமாகக்காட்சி அளிப்பவர்மனுநீதிச்சோழரே!

நீதித்தாயின் நேர்மைப் புதல்வர்!

சூரியகுலம் என்று சொல்லப்படும் சோழர்குடிப் பிறந்த மனுநீதிச் சோழர்-நீதித்தாய்க்குப் பெருமை சேர்த்த அருமைப்புதல்வராகவே நாட்டை ஆண்டிருக்கிறார்.

திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு கோலோச்சிய அவர் ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டும் நீதிமானாக ஆளவில்லை. ஐந்தறிவுபடைத்த விலங்கினத்துக்கும் நடுநிலை ஆட்சியாளராகநடந்துகாட்டியிருக்கிறார்.

நிகழ்ச்சியைச் சற்றுநினைவு கூர்வோம்:

அவரது ஒரே மகன் வீதிவிடங்கன் தேரோட்டிச் செல்கிறான். துள்ளியோடி வந்த இளங்கன்று ஒன்று தேரின் குறுக்கே வந்து தானாக விழுகிறது! சக்கரத்தில் சிக்கிச் சாவைத் தழுவுகிறது. பிள்ளையைப்பறிகொடுத்த பசுஅரண்மனை நோக்கி ஓடுகிறது! ஆராய்ச்சி மணியை அடிக்கிறது.

'என் கன்றுக்குட்டியை உன் மகன் கொன்று விட்டானே! இது நீதியா?'— என்று கேட்காமல் கேட்கிறது

மனுநீதிச் சோழனின்மனக்கதவம் திறக்கிறது. அங்கே நீதியின் உள்ளொளி நெடிதோங்கிச் சுடர் விடுகிறது!

மன்னவன் தன் பிள்ளைப் பாசத்தைத் தள்ளி வைக்கிறார்; மகனின் மறைவுக்குத் தாமே ஆணையிடுகிறார்; செயற்படுத்தியும் காட்டுகிறார்-

நீதித்தாய் இன்பக் கண்ணீர் சொரிகிறாள்

மனுநீதிச் சோழரைப் பற்றிய செய்தி ஒரு கதையாகக் கூட சிலருக்குத் தோன்றலாம்; ஆனாலும் அது ஒரு கருத்துப் பேழை; நடு நிலைமை ஆட்சிக்குச் சூட்டிய ஒரு மணி மகுடம்!

எனவேதான்,

தம்முடைய மகன் கள்ளக் கடத்தல் குற்றத்தில், ஈடுபட்டான்என்றுஅறிந்ததும்அவனைத் துறக்க மட்டுமின்றி 'அவன் மீது நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்!' என்று துணிச்சலாக நேர்மையை வெளிப்படுத்திய தேவிலால் நம்முடைய மனு நீதிச் சோழரை நினைவு கூரச் செய்கிறார்!

பிள்ளைப் பாசம் கொள்ளை இன்பம் கொடுக்க வல்லவெல்லப்பாசம் - வெல்ல முடியாத பாசம்!

ஆயினும் பொது வாழ்வில் ஈடுபடும் தலைவர்கள் அதனைச் சற்றுத் தள்ளியே வைக்க வேண்டும்! இல்லையென்றால் அவமானப் படுகுழியில் அது அவர்களைத் தள்ளி விட்டு விடும்

இதற்கு எடுத்துக் காட்டுகள் தேவை இல்லை.

இந்திரா காந்தியே சரியான எச்சரிக்கை!

ஆனால் அரசியல் காரிருளிலும் ஆட்சிக் கப்பலை நீதிவழி தவறாமல் செலுத்தும் நிகரற்ற மாலுமி தேவிலால். அவரது அடிச் சுவட்டிலேயே மற்ற தலைவர்களும் தங்கள் புகழ்விளக்கை அணையாமல் காப்பாற்றிக் கொள்வார்களாக

விஞ்ஞானத் துறையில் ஒரு சாதனை!

விஞ்ஞானத் துறையிலும் மருத்துவத் துறையிலும் புதிய சாதனைகளைப் புரிவதில் சோவியத் உலகிலேயே முதலிடம் வகித்து வருகிறது.

அண்மையில் சோவியத் விஞ்ஞானிகள் இருவர், ஒரு அதிசயமான தாளைக்கண்டுபிடித்துள்ளார்கள்.

தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்கள் இந்தத் தாளைக் காதுகளில் வைத்துக்கொண்டால் எந்திரங்கள் எழுப்பும் பேரிரைச்சல் மிகவும் மெதுவாகக் கேட்கும். ஆனால் பிறர் பேசுவது வழக்கம்போல் நன்றாகக் கேட்கும்.

சோவியத் நிபுணர்களின் இந்தப் புதிய கண்டு பிடிப்பால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் மிகுந்த பயனடைவார்கள்

"துர்க்கமனகேட்" தொடர்கதையாகிறது!

நடிகர் ஆட்சியின்

'மினிமிசா' படுத்தும்பாடு

இந்தியாவின் இருண்ட காலமான நெருக்கடி நிலையின் போது 'துர்க்மன்கேட்'டில் நடந்த இடிப்பு வேலைகளையும் அழிப்பு நடவடிக்கைகளையும் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். அப்போது யதேச்சதிகாரமான பாதையில் நடைபோட்ட இந்திராவை விழுந்து விழுந்து ஆதரித்த எம். ஜி. இராமச்சந்திரன், இப்போது தன் ஆட்சியிலும் 'துர்க்மன்கேட்' நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி தமிழகத்தை மீண்டும் துயர இருளில் மூழ்கடித்துக் கொண்டிருக்கிறார்.

பிரபல ஆங்கில இதழான 'இண்டியா டுடே' எம் ஜி. ஆரின் 'மினி மிசா' ஆட்சியை இதோ படம் பிடித்துக்காட்டுகிறது!

கூடலூர்வட்டத்தின் காட்டுப் பகுதியில் வசித்துவந்த மக்களின் இல்லங்களையும் பயிர்களையும் அழித்து அம்மக்களை அப்புறப்படுத்தும் தமிழக அரசின் மிக ரகசியமான திட்டம் காந்திபிறந்த நாளில் தான் நடந்தது!

அரசு இந்தத் திட்டத்தை 1972-ம் ஆண்டைப்போல் அல்லாது -மிக இரகசியமாகச் செயல்படுத்தியது. இதே போன்ற அப்புறப்படுத்தப்படும் நடவடிக்கை முன்பு (1972ல்)மேற்கொள்ளப்பட்ட போது அங்கு வாழ்ந்து வந்தவர்கள் வெகுண்டெழுந்து காட்டிலாகாவுடன் 'மோதி' யூகலிப்ட்ஸ் தோட்டங்களையும், மரங்களையும் சூறையாடினர்.

நெருக்கடி நிலை நிர்வாக இயந்திரத்துக்கு ஒன்றிரண்டு 'தந்திரங்களை'ப் போதித்திருந்தது. அதன்படிமுதல்படியாக இந்த நிகழ்ச்சி நடந்தபோது சென்னையிலிருந்து வந்த நிருபர்கள் குழு அந்த மலைப்பகுதிக்கு அழைத்துச்செல்லப்பட்டது. வெளியேற்ற நடவடிக்கைகளை வெளிக்காட்டுவதற்காக அல்ல! எழில்மிகு நீலகிரியைக் காணவே அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

முதல்நாள் நடவடிக்கைகள் திட்டமிட்டபடி நடந்தன. அப்போது பெரும்பான்மையான பத்திரிகை நிருபர்கள் உல்லாசப் பயணிகளாகக் காட்சிகளைக் கண்டுகளிக்க இட்டுச் செல்லப்பட்டு விட்டனர்! எனவே எம். ஜி. ஆரின் இந்த 'துர்க்மன்கேட்' வெளியேற்ற நடவடிக்கை குறித்து ஒருவரிகூட தமிழ்நாட்டின் எந்தப் பத்திரிகையிலும்வெளிவரவில்லை.

தமிழக அரசு, அங்கிருந்த மக்களின் இல்லங்களையும் பயிர்களையும் தரைமட்டமாக்கியபோதுஅச்சத்திற்குஆளான பெரும்பான்மையானோர் தமிழக எல்லையைத் தாண்டி கேரளத்துக்குச் சென்றுவிட்டனர்.

எட்டுப் பிள்ளைகளின் தந்தையானஐம்பதுவயதுலூயிஸ் என்பவர் இக் கொடுமைகளை காணச் சகியாதவராகத் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்; கேரளப் பத்திரிகைகளில் இந்நிகழ்ச்சி பெரிய எழுத்துக்களில் இடம் பெறவே. தமிழக அரசு இந்த வெளியேற்ற நடவடிக்கையை நிறுத்தியது— தற்காலிகமாக!

அந்தத் 'துர்ச்மன் கேட்' நடவடிக்கையை அறிந்த கேரளத்துப் பத்திரிகைநிருபர்கள் நடிக (ஆக்டிங்] முதல்வர் எம். ஜி. ஆர். ஆட்சியில் நடக்கும் சம்பவங்களைக் காண விரும்பி அங்கு வந்தனர்.

அப்போது—

'மலையாள மனோரமா' இதழின் புகைப்படக் காரரான சங்கர் என்பவர் ஐந்து மணிநேரம் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். அவரிடமிருந்து பறிக்கப்பட்ட 'கேமரா'வைப் போலீசார் திரும்பவும் தந்தனர் — ஆனால் உள்ளே பிலிம் சுருள் கிடையாது! மாத்யூ என்ற பத்திரிகை நிருபரையும் ஆயுதப் போலீசார் விரட்டிப் பிடித்து அடைத்தனர்,

சங்கரும், மாத்யூவும் எம் ஜி. ஆர். போட்ட இரும்புத் திரையை ஊடுருவி நிகழ்ச்சி நடந்த இடத்திற்குள் புகுந்து விட்டனர், ஆனால் பிற பத்திரிகையாளர்கள் வழியிலேயே போலீசாரால் மடக்கப்பட்டு போலீஸ் ஜீட்பிலேயே கொண்டு போய் விடப்பட்டனர்,

...காட்டு நிலங்களில் இருப்பவர்கள் திடீரென்று' குடியேறியவர்கள் அல்லர். நெடுங் காலத்திற்கு முன்னரே குடியேறி விவசாயம் செய்து வாழ்ந்து வருபவர்கள் ஆவார்கள்!

தீக்குளித்து மாண்ட லூயிஸ் சட்டப்படி பட்டா பெற்று நீண்ட காலமாக அங்கு வாழ்ந்து வந்தவர். நெருக்கடி நிலை பாணியில் எம். ஜி. ஆரின் அழிப்புப்படையினர் லூயிஸின் வீட்டை இடித்துத் தள்ளுவதற்குமுன் டெய்ஸி சின்ன எனும் அவருடைய மகளைத் துன்புறுத்தி இருக்கின்றனர்.

எம். ஜி. ஆரின் அழிப்புப் படையினர் 'சட்ட விரோதமாக குடியேறியவர்களைவெளியேற்றுகிறோம்' என்றுசொல்லி இவ்வாறு செய்யும் கொடுமைகளால் தீக்குளித்து மாண்ட லூயிஸைப் போல, நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் கூடலூர் மலைப் பகுதியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

பீகார் அரசைப் பின்பற்றுமா இந்த அரசு?

ஆலைத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்படியாகத் தொடர்ந்து நடந்து வந்த பதினாறு சர்க்கரை ஆலைகளை பீகார் அரசு தேசியமயமாக்கியுள்ளது.

மேலும் மேலும் சலுகைகளைக் கேட்டு நிர்ப்பந்தித்து வந்த ஆலை முதலாளிகளின் பேராசைக்கு ஒரு முடிவு கட்டிவிட்டது பீகார் அரசு!

தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரை நசுக்கும் முதலாளிகள், நிலப் பிரபுக்கள் ஆகியோருக்குத் துணைநிற்கும் அ. தி. மு. க. ஆட்சி பீகாரைப் பார்த்துப் பாடம் கற்றுக்கொள்ளுமா?

புனிதத் தளத்திற்கு..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போது தனிமையாக வைத்து வதைக்கப்பட்டார்,

"என் தம்பி கருணாநிதி இருக்கின்ற அந்தப் பாளைச் சிறையே எனக்குப் புனிதத் தலம்'' என்று, கலைஞரை அங்கு சந்தித்து விட்டுத் திரும்பியபோது அண்ணா சொன்னார்.

வேலை நிறுத்த அறப்போரை ஒட்டி அரசின்காவற் கைதியாக ஆறு நாட்கள்நாங்கள் பாளைச்சிறையிலே அடைபட்டுக் கிடந்தோம். ஆம்! பாதயாத்திரை சென்றோம். பாளைச்சிறைடாம் புனிதத் தலம் அடைந்தோம். கலைஞர் ஒருசமயம் அடைபட்டுக்கிடந்த அறை நோக்கி வணங்கி நின்றோம்.

போய்வந்தோம்

புனிதத்தலம்!

பூரிப்படைந்தோம்!

'துறவு' பூண்டுவிட்டாராம் துல்மோகன்ராம்!

துல்மோகன்ராம் என்பவரை நினைவிருக்கிறதா?

இந்திரா காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அரசியல் வாழ்வில் வேறுயாரும் செய்யாததை அவர் செய்து காட்டியவர்!

இந்திரா காந்தி ஆட்சிக்காலத்தில்இறக்குமதி'லைசென்ஸ்'வாங்க விரும்பிய ஏழுகொழுத்த வியாபாரிகள் துல்மோகன்ராமை அணுகிய போது, அந்த வியாபாரிகளுக்கு 'லைசென்சு' தரலாம் என்று 'சிபாரிசு' செய்வதுபோல் பதினாறுநாடாளுமன்றஉறுப்பினர்களின்கையெழுத்துக்கள் கொண்ட மனு அப்போதைய மத்திய அமைச்சர் எல் என். மிஸ்ராவிடம் தரப்பட்டது.

அந்த மனு அமைச்சரால் அங்கீகாரம் செய்யப்பட்டு இறக்குமதிக்கான 'லைசென்சு' வியாபாரிகளுக்குத் தரப்பட்டது.

ஆனால் —

உண்மை என்னவென்றால், கையெழுத்துப் போட்டவர்கள் பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லர். துல்மோகன்ராமே அவர்களைப் போலப் பொய்க் கையெழுத்துப் போட்டாராம்:

வழக்கு விசாரணைக்கு வந்தது.

துல்மோகன்ராம் பொய்க்கையெழுத்துப் போட்டது உண்மைதான் என்றுதெரியவந்தது. நீதிமன்றம், அவருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இப்போது துல்மோகன்ராம் புத்தசாமியாராகி விட்டாராம்:

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
தரம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம்சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

கலைஞரின் கைவண்ணம் மிளிரும்

அண்ணாவின் அழகோவியம்

"வண்டிக்காரன் மகன்"

திரையுலகில் புதிய மரபை உருவாக்கியவர் அண்ணா. அந்த மரபை உறுதிப்படுத்தியவர் கலைஞர். பூம்புகார் புரடைக்ஷன்சாரின் 'வண்டிக்காரன் மகன்' அண்ணா தீட்டியஓவியம், அதற்கு வண்ணம் தீட்டியுள்ளார் கலைஞர்.

ஓவியத்தின் அழகு தீட்டிய வண்ணத்தால் மேலும் அழகு பெறுகிறது.

புகழ்பெற்ற புதினங்கள், நாடகங்கள் திரைப்படமாகிற போது தோல்வியைத் தழுவிக் கொள்வது திரைவரலாற்றில் அடிக்கடி நிகழ்வது. ஆனல் கலைஞரின் வரலாறு தனி. அவர் கரம்பட்ட எதுவும் தரங் கெட்டுப் போவதில்லை, 'வண்டிக்காரன் மகனும்' அப்படியே.

கூழாங்கல்லுக்கே பளபளப் பேற்றும் ரசவாதி அவர், அவர் கரத்தில்வைரம்கிடைத்தால் கேட்கவா வேண்டும்?

அவர் பழுத்த அனுபவசாலி. அவர் கதை வசனம் எழுதினல் இயக்குநர், படப்பிடிப்பாளர் போன்றவர்களின் பளு பாதி குறைந்து விடும். ஆம், அனைத்துத்துறையிலும்அவருடையஅரிய ஆலோசனைகள் உஸதிவாரமாக அமையும்.

அண்ணா எழுதிய 'வண்டிக்காரன் மகன்' சமூகக் கேலிச்சித்திரம் (Social Satire) ஆனல் அது கலைஞரின் கைவண்ணத்தால் அரசியல் கேலிச் சித்திரமாக (Political Satire) பரிணமம் பெற்றுள்ளது,

சிலரின் கொள்கைப் பிரச்சாரம் — தத்துவ விளக்கம் — கதை ஓட்டத்தைப் பாதித்து விடுவதுண்டு. பெர்னட்ஷாவே இக்குறைக்குப் பலி ஆகியவர் ஆனல் கலைஞரின் கொள்கைப் பிரச்சாரம்கதைஓட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பதில்லை. உணவில் கலக்கும் உப்பைப்போல் அளவாகஅது அமைந்து சுவைகூட்டும்.

இறந்த காலத்து ஜாமீன்தார் நிகழ்கால நிதர்சன மனிதராகஉருப்பெறுகிறர், கலைஞரின் கைவண்ணத்தால். நம்மிடையே வாழ்கிற இரட்டை மனிதராக—வவ்வால் மனிதராக — விலாங்கு மனிதராக அவர் திகழ்கிறர். ஒரு போலியைத் தோலுரித்துக் காட்டுகிறர் கலைஞர் என்பது படம் பார்ப்பவர்கள்பொருத்தமான இடங்களில் எழுப்பும் கையொலியால் புரிந்து கொள்ள முடிகிறது.

கலைஞரின் படைப்பாற்றல் (Creative Talent) பகைவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று

அவர் கதைக்கு வசனம் தீட்டுவது வைரத்திற்குப் பட்டை தீட்டுவதுபோல் அமையும்.

'வண்டிக்காரன் மகனில்' எவ்வளவு சிலேடைகள்! அவ்வளவும்விரசம் இல்லாத சிலேடைகள். எவ்வளவு இலக்கியத் தரமிக்க அரசியல் தாக்குதல்கள்! ஒவ்வொரு இடத்திலும் கைதட்டல்கள்.

படம் தொடக்கத்திலிருந்து முடிவுவரை தொய்வின்றி விறுவிறுப்போடு ஓடுகிறது. இயக்குநர், நடிகர்கள் ஒலிப்பதிவாளர் ஒளிப்பதிவாளர் படப்பிடிப்பாளர் ஆகிய அனைவரும் தங்கள்பணியினைப் பழுதின்றி நிறைவேற்றியுள்ளனர் குறை என்றுஎதையும்சுட்டிக் காட்ட முடியவில்லை.

சண்டைக்காட்சிகள்—கனவுக் காட்சிகள் — நடனங்கள் இப்படி ஜனரஞ்சன அம்சங்கள் ஜனரஞ்சனமாகவே அமைந்து விட்டிருக்கின்றன.

நடிப்பில் யாரைக் குறிப்பிடுவது யாரைக் குறிப்பிடாமல் விடுவது? அசோகன் நடிப்பில் ஜமீந்தார்த்தனம் பளிச்சிடுகிறது — பரிமளிக்கிறது. மனேரமா கவர்ச்சிக் கன்னியாக நடிக்கும்போதும், கண்ணியமான ஆசிரியையாகத் தோன்றும்போதும் பாசம் மிக்கத் தாயாகத் தோன்றும் போதும் பாத்திரத்தோடு ஒன்றி விடுகிறர்.

ஜெயசித்ரா கச்சிதமாக நடித்துள்ளார். ரோஜாரமணி அப்பப்பா எவ்வளவு துறுதுறுப்பு! சுப்பையாவைப் பற்றி என்ன சொல்ல! அவர் குணச்சித்திர நடிகராயிற்றே.

கதாநாயகனக நடிக்கிற ஜெய்சங்கருக்குநிறையவாய்ப்புகள்! அவ்வாய்ப்புகளை அவர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறர், காதல் காட்சிகளில்ஜமாய்க்கிறர்! சண்டைக் காட்சிகளில் வெளுத்துக் கட்டுகிறர்! அவர் நடிப்பில் பெருகும் முதிர்ச்சியும் கூடியிருக்கிறது.

பாடல்கள் இனிமையாக இருக்கின்றன. வண்ணம் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கிறது. ஒளிப்பதிவாளர் தம் தொழில் நுட்பத் திறனைநன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

புற்றீசல்போல் வெளிவந்துள்ள தீபாவளி சீசன் படங்களிலிருந்து மாறுபட்டு — தனித் தன்மையுடன், வண்டிக்காரன் மகன்' முதல்பரிசைத் தட்டிச் செல்கிறது'

பழைய பத்தாம்பசலித்தனமான கருத்துக்கள் எனும் பாசிகள் மண்டித் தேங்கிக் கிடந்த திரைப்பட நீரோட்டத்தில் 'வேலைக்காரி' — பராசக்தி' போன்றபடங்கள்புதிய அலைகளை(Newwave) ஏற்படுத்தியதுபோல்-நீண்டகாலத்திற்குப்பிறகு—மீண்டும் ஓர் புதிய அலை வீசியுள்ளது, 'வண்டிக்காரன் மகன்' திரை ஓவியம்மூலம்.

எஸ்.ஜீவ

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (156சூரியநாராயணசெட்டிதெரு. இராயபுரம், 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009